




# தினக்குரல்

யாழ்

THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com








ஓசை : 020 குரல் : 254 செவ்வாய்க்கிழமை 23 நவம்பர் Tuesday 23th November 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12


## கொரோனா பலி திடீர் அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா மரணங்களில் திடீர் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

நேற்று 31 கொரோனா மரணங்கள் அறிவிக்கப்பட்டன.

பக்கம் 02

## தடை கோரி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விண்ணப்பம்

### -இன்று விசாரணை -

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாவீரர் நினைவேந்தலுக்கு தடை கோரி பொலிஸார் செய்த விண்ணப்பம் தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றின் கட்டளை இன்று

பக்கம் 02




# 93 வாக்குகளால் பட்ஜெட் வெற்றி

### ஹக்கீம், ரிசாத் எதிர்ப்பு-கட்சியினர் ஆதரவு; 11 எம்.பி.க்கள் பங்கேற்கவில்லை

பா.கிருபாகரன்-ந. ஜெயகாந்தன்

இலங்கையின் 76ஆவதும்.கோத்தபாய ராஜபக்ச அரசின் 3 ஆவதும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவின் முதலாவதுமான 2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின்

பக்கம் 02



# மாவீரர் நினைவேந்தலுக்கு தடை விதிக்க மறுப்பு

### பொலிஸாரின் விண்ணப்பம் சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம் நீதிவான் நீதிமன்றங்களால் நிராகரிப்பு

மாவீரர் நினைவேந்தலுக்கு தடை விதிக்கக் கோரி சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம் நீதிவான் நீதிமன்றங்களில் பொலிஸார் செய்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

**சாவகச்சேரி**

மாவீரர் நினைவேந்தலுக்கு தடை விதிக்கக் கோரி சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் இணைந்து சாவகச்சேரிநீதிமன்றில் தாக்கல் செய்த விண்ணப்பம் மன்றினால் நேற்று நிராகரிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 13 பேருக்கு நினைவேந்தல்

பக்கம் 02



## யாழ்.பல்கலைக்கழகத்தில் நினைவேந்தலுக்குத் தடை

### -நீதிமன்ற கட்டளை கையளிக்கப்பட்டது-




யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி கோப்பாய் பொலிஸாரினால் முன்வைக்கப்பட விண்ணப்பத்துக்கு, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை அனுமதியளித்துள்ள நிலையில் பொலிஸாரால் பெயர் குறிப்பிட்டவர்களுக்கான நீதிமன்ற தடையுத்தரவு நேற்று அவர்களிடம் வழங்கிவைக்கப்பட்டது.

பக்கம் 02

## இனவாதத்தை அரசு கையில் எடுக்கிறது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



பா. கிருபாகரன்- ந. ஜெயகாந்தன்

நாட்டின் பொருளாதாரத்தை கட்டயெழுப்ப வேண்டுமாயின் நாட்டில்

பக்கம் 02

## நரேந்திர மோடியை சந்திக்கவுள்ள பசில்

### -புதுடில்லி செல்கிறார்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச அடுத்த சில நாட்களில் புது டில்லி சென்று சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தச் சந்திப்பிற்கான ஏற்பாடுகளை கொழும்பில்

பக்கம் 02

### சபைக்கு வந்த மரக்கறிகள்;



## போஞ்சி-6 ரூபா, கரட் -28 ரூபா கத்தரிக்காய்-18 ரூபா

பா. கிருபாகரன்- ந.ஜெயகாந்தன்

மரக்கறிகளுடன் சபைக்கு வந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. நளின் பண்டார,அதன் ஒவ்வொன்றின் விலையையும் சபாநாயகருக்கும் சபைக்கும் விளங்கப் படுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற வரவு – செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஏழாம் நாள் விவாதத்தில் உரையாற்று கையிலேயே மரக்கறிகள் விலைகளை அவர்

பக்கம் 02

## இரசாயனப் பசளைக்குத் தடை கொள்கையில் மாற்றமில்லை

### ஜனாதிபதி கோட்டாபய உறுதி

இந்நாட்டின் விவசாயத் துறையை முழுமையாகச் சேதன விவசாயத்துக்கு மாற்றுவதற்கான பசுமை விவசாயக் கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லையென, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உறுதியாகத் தெரிவித்தார்.

பக்கம் 03



### மூன்றாவது நாளாக 5 மணி நேர விசாரணை



மூன்றாவது நாளாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முற்பகல் ஆஜரான அருட்தந்தை சிறில் காமினி பெர்னான்டோ வாக்குமூலம்

பக்கம் 02

## முதுபெரும் ஊடக ஆளுமை கானமயில்நாதன் காலமானார்

ஈழத் தமிழ் மூத்த ஊடகவியலாளர் ம.வ. கானமயில்நாதன் நேற்று திங்கட்கிழமை தனது 79 ஆவது வயதில் காலமானார்.



யாழ்.வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ம.வ.கானமயில்நாதன் 1942 ஆம் ஆண்டு யூலை மாதம்- 25 ஆம் திகதி பிறந்தார்.

உதயன் பத்திரிகை 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட முதல் 36 வருடங்கள் அதன் பிரதம

பக்கம் 02

## மாகாணசபை தேர்தலை முடிந்தால் நடத்துங்கள்

### ஐக்கிய மக்கள் சக்தி சவால்

பா. கிருபாகரன்- ந.ஜெயகாந்தன்

மக்கள் ஆணை யாருக்கு இருக்கிறது என்பதை பார்க்க வேண்டுமானால் மாகாணசபை தேர்தலை 2022 ஆம் ஆண்டில் நடத்துமாறு ஐக்கியமக்கள் சக்தியின் கொழும்பு மாவட்டஎம்.பி.யான எஸ்.எம்.மரிக்கார் அரசுக்கு சவால் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற வரவு –செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஏழாம் நாள் விவாதத்தில் உரையாற்று கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்ததும் சித்திரம் வரைந்த

பக்கம் 02




## கொரோனா ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்த 31 பேரில் 21 ஆண்களும் 10 பெண்களும் அடங்குகின்றனர். இவற்றுடன் நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 14,158 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 23 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். 30 முதல் 59 வயது வரையான 07 பேரும் 30 வயதுக்குட்பட்டோரில் ஒருவரும் இறந்தவர்களில் அடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர்,செயலாளர் உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும் தடை உத்தரவு

வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி நீதிமன்ற தடையுத்தரவில் நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 28 ஆம் திகதி வரை தமிழீழ விடுதலைப் புலிகளின் இறந்த நபர்களை நினைவு கூறுகின்ற மாவீரர் நாள் நிகழ்வினை தற்போது நாட்டில் காணப்படும் கொரோனாத் தொற்றுப் பரவலை கவனத்திற் கொண்டும் இந்நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பொது இடத்தில்,பொது எண்ணத்துடன் பொதுமக்களை ஒன்றுகூட்டியோ அல்லது தனிநபர் மூலமோ மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்துவதற்கு மன்றுக்குள்ள அதிகாரத்தின் பிரகாரம் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றுள்ளது.

மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படலாம் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சூழலில் இராணுவத்தினரும் பொலிஸாரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ச-40)

## மாவீரர் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுகளில் பங்கேற்ற தடையுத்தரவு பிறப்பிக்க கோரி சாவகச்சேரி நீதிமன்றத்தில் சாவகச்சேரி, கொடிகாமம் பொலிசாரால் நேற்று விண்ணப்பம் செய்யப்பட்டது.

இதனை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிவான் யூட்சன், பெயர் குறிப்பிட்டவர்களில் பெரும்பாலானவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருப்பதாலும் இலங்கையின் சட்டம் இயற்றுகின்ற உயரிய சபைகளில் இருப்பதாலும் இலங்கையின் சட்டம் தொடர்பாக தெளிவாக அறிந்திருப்பார்கள். எனவே அவர்கள் மீது சட்டத்தை மீறுவார்கள் என்ற அடிப்படையில் பொலிஸாரின் கோரிக்கையை ஏற்று தடையுத்தரவு பிறப்பிக்க முடியாது எனவும் நீதிவான் குறிப்பிட்டார்.

ஆனால் பெயர் குறிப்பிட்ட நபர்களும் ஏனையவர்களும் இலங்கையின் சட்டங்களை மீறி ஏதாவது நடவடிக்கைகளை முன்னெடுத்தால் கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது.

அதனால் பொலிஸாரின் கோரிக்கையை ஏற்று குறித்த நபர்களுக்கு எதிராக தடையுத்தரவை வழங்க முடியாது என்று தெரிவித்து குறித்த கோரிக்கையை நீதிமன்றம் தள்ளுபடி செய்வதாக நீதிபதி உத்தரவிட்டார். இந்த வழக்கில் பெயர் குறிப்பிட்டவர்கள் சார்பாக சட்டத்தரணிகள் மணிவண்ணன், சதீஸ்வரன், குகனேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகினர்.

### மல்லாகம்

மாவீரர் நினைவேந்தலுக்கு தடைகோரி எட்டு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இணைந்து மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்த விண்ணப்பமும் நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது.

தடைசெய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் இறந்த நபர்களை நினைவு கூறுகின்ற மாவீரர் நாள் நிகழ்வினை அனுஷ்டிக்கவும் தற்போது நாட்டில் காணப்படும் கொரோனாத் தொற்றுப் பரவலை கவனத்திற் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலருக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்க கோரி மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிசாரால் நேற்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த மல்லாகம் நீதிமன்ற நீதிவான் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

பிரதிவாதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளுராட்சி சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள் ஆலய மதகுருமார்கள் காணப்பட்டனர். இந்த வழக்கில் பிரதிவாதிகள் சார்பாக சிரேஸ்ட சட்டத்தரணி என்.சிறிக்காந்தா, சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், வி.திருக்குமரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

### பருத்தித்துறை

இதேபோன்று மாவீரர் நினைவேந்தலுக்கு தடை கோரி நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப் பொலிஸார் இணைந்து பருத்தித்துறை நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவும் நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது.

பொலிஸாரால் 106 பிரிவின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்ட நிலையில் இந்த வழக்கை குறித்த பிரிவின் கீழ் கொண்டு செல்ல முடியாது என சட்டத்தரணிகள் மன்றுக்கு சமர்ப்பணம் செய்தனர்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி வழக்கை தள்ளுபடி செய்ததுடன் சட்டத்துக்கு முரணான வகையில் எவரானும் குறித்த நிகழ்வை நடத்தினாலோ அல்லது கொவிட் பாதுகாப்பு விதிமுறைகளை மீறி நடந்தாலோ பொலிஸார் தமக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி உரிய நபர்களை மன்றில் முற்படுத்த முடியும் எனத் தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்தார். (ச-40,75,21,44)

## தடை கோரி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்படவுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை தொகுதி கிளை செயலாளர் கருணாகரன் நாவலன் , தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட வாலிப முன்னணி செயலாளர் கருணாகரன் குணாளன் , ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினர் அம்பலம் கனகையா , ஊர்காவற்றுறை தொகுதி கிளையின்

நிர்வாக கிளை உறுப்பினர்களான மடுத்தீன் பெனடிக்ற் ( சின்ன மணி ) , ரமேஷ் றமில்டன், மற்றும் ருத்ரன் ஆகியோர் பெயர் குறிப்பிட்டு தடை கோரி விண்ணப்பம் செய்யப்பட்டது. இந்த விண்ணப்பம் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் பெயர் குறித்த நபர்கள் சார்பாக சட்டத்தரணி அருட்பிரகாசம் நிரோஷன் ஆஜராகியிருந்தார். இந்நிலையில் இந்த விண்ணப்பம் இன்று மீண்டும் பரிசீலிக்கப்பட்டு கட்டளை வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-75)

## மூன்றாவது ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியப்பின் அங்கிருந்து வெளியேறி உள்ளார்.

இதன்போது, இவரிடம் 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அருட்தந்தை சிறில் காமினிக்கு தெரிந்த தகவல்களை வழங்குவதற்காக இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார். கடந்த 16 ஆம் திகதி சிஐடியில் ஆஜரான அவரிடம் 8 மணி நேர வாக்கு மூலம் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதுபெரும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியராக கடமையாற்றினார். தனது இறுதிக் காலத்தில் அவா' காலைக்கதிர் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்தார். நெருக்கடியான கால கட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப்பணியாற்றிய மூத்த ஊடகவியலாளர்களுக்குள் இவரும் ஒருவர்.

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் கடந்த 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் தன்னார்வ அமைப்பின் விருது வழங்கும் விழாவில் , விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அதேவேளை ஊடகத்துறையில் தேசியம் சார்ந்து நெருக்கடியாக சூழலில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியமைக்காக கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி யாழ்.ஊடக அமையத்தினால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(40,18)

## 93 வாக்குகளால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 153 வாக்குகளும் எதிராக 60வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. வாக்கெடுப்பை கோரியதனையடுத்து இலத்திரனியல் முறைப்படி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச பங்கேற்றிருந்தார்

2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட எம்.பி.யான இஷாக் ரஹுமான், பதுளை மாவட்ட எம்.பி.யான அரவிந்தகுமார், தேசியப்பட்டியல் எம்.பி.யான டயானா கமகே,மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக்கட்சிகளாகவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி.க்களான ஹரீஸ்,பைசல் ஹாசிம் ,நசீர் அஹமட், முஸ்லிம் தேசிய கூட்டணியின் புத்தளம் மாவட்ட எம்.பி.யான அலிசப்ரி ரஹீம் ,அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட எம்.பி.யான முஷாரப்,சுயேச்சையாக செயற்படும் எம்.பி.யான அத்துரலிய இரத்தின தேரர் ஆகியோர் வாக்களித்தனர்.

அதேவேளை 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு எதிராக எதிர்க்கட்சிகளான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி,இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே .வி.பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி ஆகியன வாக்களித்த நிலையில் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இதேவேளை வரவு – செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கபோவதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லி ம் காங்கிரஸின் உயர்பீட கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் .இந்தக் கூட்டத்தில் எம்.எஸ்.தௌபிக் எம்.பி. கலந்து கொண்டிருந்தார் எனவும் ஏனையோர் சுகயீனம் காரணமாக கலந்துகொள்ள இயலாது என அறிவித்திருந்தனர் எனவும் தெரிவித்திருந்த நிலையில் அந்தக்கூட்டத்தில் பங்கேற்காத மூவரும் சபைக்கு வந்து வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாகவே வாக்களித்தனர். அதேவேளை முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி..யான தௌபிக் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இதேவேளை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பியுமான றிசாத் பதியுதீன் எதிர்த்து வாக்களித்த நிலையில் அவரின் கட்சி எம்.பி.யான முஷராவ் ஆதரவாக வாக்களித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்ட சட்டமூலம் ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் இரண்டாவது வாசிப்பு கடந்த 12 ஆம் திகதி நிதி அமைச்சர் பசில்ராஜபக்சவினால் சபையில் முன்வைக்கப்பட்டு சுமார் இரு மணிநேரம் வரவு – செலவுத் திட்ட உரையாற்றியிருந்தார்.

இந்நிலையில் மறுநாள் 13ஆம் திகதி சனிக்கிழமை முதல் நேற்று 22ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஏழு நாட்கள் வரவுசெலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்ற நிலையிலேயே நேற்று மாலை 5.10 மணிக்கு இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதேவேளை 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 7 நாட்கள் நடந்த நிலையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ,முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு தலைவர் அலி சப்ரி ரஹீம் ஆகியோர் உரையாற்றவில்லை.

இதேவேளை நேற்றைய வாக்கெடுப்பின்போது தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் , தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் தேசியக்கூட்டமைப்பை சேர்ந்த எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன்,முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி..யான தௌபிக் அரச தரப்பை சேர்ந்த விஜேதாச ராஜபக்ச உள்ளிட்ட எதிர்க்கட்சி அரச தரப்பை சேர்ந்த 11 எம்.பி.க்கள் பங்கேற்கவில்லை.

2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நேற்று நிரைவேற்றப்பட்ட ட நிலையில்இன்று 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் குழு நிலையிலான விவாதம் ஆரம்பமாகவிருப்பதுடன், சனிக்கிழமை உள்ளடங்கலாக டிசம்பர் 10ஆம் திகதி வரை 16 நாட்கள் விவாதத்தை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 10ஆம் திகதி மாலை 5 மணிக்கு மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

## மாகாண சபை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள், தற்போது நாட்டை விட்டு வெளியேறுவதற்காக கடவுசீட்டைபெற வரிசையில் நிற்கிறார்கள். இருப்பதற்கு சிறந்த நாடுஎன்பதற்குப் பதிலாக, நாட்டை விட்டு வெளியேறும் நிலைக்கு இளைஞர்களை அரசாங்கம் தள்ளியுள்ளது. நனோ நைட்ரஜின் இறக்குமதியில் இடம்பெற்ற ஊழல், மோசடி தொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமவும், இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவுக்கும் மோதிக்துகொள்கிறார்கள். இந்த ஊழல் மோசடியில் தொடர்புபட்ட ஒருவர் அமைச்சர் மஹிந்தானந்தவுடனேயே தான் டீல் செய்ததாக கூறுகிறார் இதேவேளை மக்கள் ஆணை யாருக்கு இருக்கிறது என்பதை பார்க்க வேண்டுமானால் மாகாணசபைகளுக்கான தேர்தலை 2022 ஆம் ஆண்டில் நடத்திக் காட்டுமாறு அரசுக்கு சவால் விடுக்கின்றேன்.

ஆனால் தற்போதைய நிலைமையில் அரசாங்கம், தேர்தலை நடத்தப்போவதில்லை. இலங்கையில் அடுத்த வாரத்தில் கறுப்பு டொலர்களை வெள்ளை டொலர்களாக மாற்றும் செயற்பாடுநடக்கபோகின்றது.

## இனவாதத்தை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டியது அவசியம் என்றும், ஆனால் அரசாங்கமோ பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காக இனவாதத்தை தூண்டுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 7 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அதன்போது மேலும் கூறுகையில்,

கொவிட் தொற்று நிலைமைக்கு பின்னர் நாட்டில் வறுமை நிலைமை உருவாகியுள்ளது. அரசாங்கத்தின் திட்டமிடப்படாத பொருளாதார முகாமைத்துவமே இந்த புதிய வறுமைக்கு காரணமாகியுள்ளது. வருமான ரீதியான வறுமை, உணர்வுரீதியான வறுமை, நாட்டில் பெரும்பாலானவர்கள் மந்த போசன நிலை உருவாகி அதனால் ஏற்பட்டுள்ள வறுமை நிலை ஆகியன தற்போது தேசிய பிரச்சினையாகி உள்ளன.

எமது அரசாங்கத்தின் காலத்தில் உலக வங்கியானது ஜனசவிய திட்டத்திற்கு மட்டுமே நிதி வழங்கியது. இத்தகைய வேறு எந்த திட்டங்களுக்கும் அந்த வங்கி நிதி வழங்கியதில்லை. அந்தளவு அந்த திட்டம் மிக சிறப்பான வறுமை ஒழிப்புக்கான திட்டமாக இருந்தது.

இதேவேளை பொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது. நாட்டின் வருமானம் குறைவடைந்துள்ளது. வருமானத்தை ஏற்படுத்திக்கொள்ள அரசாங்கத்திடம் எந்த திட்டமும் இல்லை. அடுத்த வருடத்துக்கு மொத்தமாக 6721 மில்லியன் டொலர் கடன் செலுத்தவேண்டி இருக்கின்றது. அடுத்துவரும் ஒன்றரை மாதத்துக்கே அந்நிய செலாவணி இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் எவ்வாறு முகம்கொடுப்பது. மக்கள் தாங்க முடியாத பொருளாதார பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு. மக்கள் பொருட்களை பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்கவேண்டிய நிலை, இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு நிலையான தீர்மானத்துக்கு வரவேண்டும்.

அதனால் அரசாங்கம் தொடர்ந்தும் தடுமாறிக் கொண்டிருக்காமல் விரைவாக எடுக்கவேண்டிய தீர்மானங்களுக்கு செல்லவேண்டும். அதற்காக சர்வதேச நாணய நிதியங்களுடன் கலந்துரையாடவேண்டும். அதன்போது எமது தனித்துவத்தை பாதுகாத்துக்கொள்ளவேண்டும். எமது கடன்களை மீள் கட்டமைப்பு செய்யவேண்டும். அதற்காக நாங்களும் உதவ தயாராக இருக்கின்றோம்.

நாட்டுக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கக்கூடிய சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அதனால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு எந்த நிவாரணமும் இல்லை. அதனால் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் வரவு செலவு திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவேண்டும்.

எவ்வாறாயினும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டயெழுப்ப நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டும். ஆனால் ஒருநாடு ஒருசட்டத்தை ஏற்படுத்துவதாக கூறிக்கொண்டு ஆட்சிக்குவந்த இந்த அரசாங்கம் நாட்டில் இருக்கும் பிரச்சினைகளை மறைப்பதற்கு இனங்களுக்களுக்கிடையில் ஏற்படுத்தி வருகின்றது. ஒரு நாடு ஒரு சட்டம் தொடர்பான செயலணியை அமைத்து ஒரு சமூகத்தை முற்றாக புறக்கணித்திருக்கின்றது. நாட்டுக்குள் பாரிய அழிவை ஏற்படுத்தவா அரசாங்கம் முயற்சிக்கின்றது. இனங்களுக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்திக்கொண்டு நாடு முன்னுக்கு செல்ல முடியாது.

## போஞ்சி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளங்கப்படுத்தினார்.

முதலில் ஒரு போஞ்சியை எடுத்த வர இது ஒன்றின் விலை 6 ரூபா 50 சதம் என்றார். அதன் பின்னர் ஒரு கரட்டை எடுத்த வர இது ஒன்றின் விலை 28 ரூபா எனவும் கத்தரிக்காய் ஒன்றை எடுத்து இதன் ஒன்றின் விலை 18 ரூபா எனவும் கூறி இவற்றில் 250 கிராமைக் கூட வாங்க மக்கள் வசதி இல்லாத நிலையில் இருப்பதாக கூறினார்.

## நரேந்திர மோடியை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஆகியன இணைந்து மேற்கொண்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறினார். இச்சந்திப்பு எதிர்வரும் சில தினங்களில் இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இவ்விஜயத்தின்போது இந்தியாவில் உள்ள சில சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடனும் நிதியமைச்சர் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று அவர் கூறினார்.

இந்தியாவுடனான இலங்கை உறவு வலுவான நிலையில் உள்ளது. இலங்கைக்கு தேவை ஏற்படும் போது இந்தியா எப்போதும் உதவிகளை வழங்கி வருவதாக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த விஜயத்தின் போது நிதியமைச்சர் இந்தியாவிடமிருந்து கடன்களைப் பெற உத்தேசிக்கவில்லை எனவும் பீரிஷ் குறிப்பிட்டார். பதிலாக, இந்தியாவிடமிருந்து அதிக முதலீடுகளை நிதியமைச்சர் நாடுவார். அத்துடன், அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது குறித்தும் அவா' பேசுவார் எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

# புலம்பெயர் தமிழர்களால் மட்டுமே இலங்கையைக் காப்பாற்ற முடியும்

## -படைகளே நாட்டுக்கு பெரும் சுமை - சார்ள்ஸ் எம்.பி.-

**பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்**

வருமானத்தில் மிகவும் பலம் பெற்றவர்களாகவுள்ள புலம்பெயர் தமிழர்களினால் மட்டுமே இலங்கையைக் காப்பாற்ற முடியுமெனத் தெரிவித்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன் அரச ஊழியர்கள் நாட்டுக்கு சுமையென அரசு கூறுகின்றது.ஆனால் பாதுகாப்புப் படைகளே இந்த நாட்டுக்கு பெரும் சுமை என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஏழாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு கொரோனா தொற்று ஒரு காரணமாக இருந்தாலும் கூட நாட்டின் தவறான பொருளாதார கொள்கையும் முகாமைத்துவமுமே பிரதான காரணமாகும். இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் தமது வருமானத்தையும் மீறி பாதுகாப்பிற்காக மிகப்பெரிய தொகையை ஒதுக்குவதே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை பாதுகாப்பிற்கு 37 இ90.800 கோடி ரூபா நிதி ஒடுக்கப்பட்டுள்ளது.

அரச சேவையாளர்கள் நாட்டுக்கு சுமையென அரசு கூறுகின்றது. ஆனால் பாதுகாப்பு படைகளே இந்த நாட்டுக்கு பெரும் சுமை . ஆட்சியாளர்கள் தமது ஆட்சியை தக்கவைக்க இராணுவ ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவும் அவர்களின் வாக்கு வங்கியை தக்க வைக்கவுமே பாதுகாப்பு படைகளுக்கு இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். அரச சேவையில் நிபுணத்துவ அதிகாரிகளை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக ஒய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை நியமிக்கின்றனர். இதனால்அரச அதிகாரிகள் பலர் இராஜிநாமா செய்கின்றனர்.

பயங்கரவாத தடை சட்டமே வெளிநாட்டிலுள்ள முதலீட்டாளர்கள் முதலீடுசெய்ய தடையாக உள்ளது. குறிப்பாக உலக நாடுகளில் உள்ள ஈழத் தமிழர்கள் சொந்த மண்ணில் அதிக பற்றுக்கொண்டவர்கள். அவர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வந்தால் அவர்களை அச்சுறுத்தி பணம் பறிப்பதும் பயங்கரவாத பிரிவுக்கு அழைத்து பயமுறுத்துவதும் அவர்களுடைய முதலீட்டை தடுக்கின்றது.

இலங்கைக்கு வருமானத்தை தருகின்ற சுற்றுலாப்பயணிகள் மிக முக்கியமானதாகும். இலங்கைக்கு சுற்றுலாப்பயணிகளாக வருபவர்களில் 50 வீதமானவர்கள் வடக்கு-கிழக்கின் புலம்பெயர் தமிழர்கள் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.வருமானத்தில் மிகவும் பலம் பெற்றவர்களாகவுள்ள புலம்பெயர் தமிழர்களினால் மட்டுமே இலங்கையைக் காப்பாற்ற முடியும்.

அதேபோல் வடக்கு-கிழக்கு மீனவர்கள் விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். பொருட்களின் விலையேற்றம் காரணமாக மக்கள் பதற்றமான சூழலில் உள்ளனர். தமிழர்களின் இருப்பை அழிக்க அரசு சிங்கள குடியேற்றங்களை தமிழர் பகுதிகளில் அவசர அவசரமாக முன்னெடுத்து வருகின்றது என்றார்.

# கொலை வாளின் கீழ் நின்றுகொண்டே பேனா முனையுடன் போராடியவர்

## -ஊடகவியலாளர் கானமயில்நாதன் மறைவுக்கு யாழ். ஊடக அமையம் இரங்கல்-

அச்சுறுத்தல்களால் அடிபணிய வைக்கலாமென்று பலரும் எதிர்பார்த்திருந்த போதும் தனது ஒற்றை பேனாவின் முனையை நம்பி கொலை வாளின் கீழாக ஊடகப்பணியாற்றியவர் ம.வ.கானமயில்நாதன் என அவரது மறைவு குறித்து யாழ்.ஊடக அமையம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈழ விடுதலைப்போராட்டத்தின் சத்தமற்ற ஊடக சாட்சியங்களுள் ஒன்றாக இருந்து மறைந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயில்நாதன் அவர்களிற்கு யாழ்.ஊடக அமையம் தனது அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்கின்றது.

ஊடக பரப்பில் உரிமை கோரப்படாத மரணங்களும் காணாமல் ஆக்கப்படுதல்களும் அச்சுறுத்தல்களும் நிரம்பி வழிந்த யாழ்ப்பாண மண்ணில் சோரம்போகாது தனது ஊடகப்பணியினை உதயன் நாளிதழில் அதன் பிரதம ஆசிரியராக இருந்து ஆற்றியவர் ம.வ.கானமயில்நாதன்.

அச்சுறுத்தல்களால் அடிபணிய வைக்கலாமென்று பலரும் எதிர்பார்த்திருந்த போதும் தனது ஒற்றை பேனாவின் முனையை நம்பி கொலை வாளின் கீழாக ஊடகப்பணியாற்றியவர் ம.வ.கானமயில்நாதன்.

தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்ட பரப்பில் ஊடக பங்களிப்பு பற்றிய பதிவுகளில் என்றுமே விலக்கப்படமுடியாத சக்திகளுள் ஒருவராக அவர் இருந்து வந்திருந்தார்.

அவரது ஊடகப்பள்ளியில் புடம் போடப்பட்ட நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள் உலகெங்கும் நிரம்பிப் போயுள்ளனர்.

2005இன் பிற்பகுதியில் ஜனநாயகம் பேசுகின்ற துப்பாக்கிதாரர்களது கொலை கரங்களில் இருந்து தப்பிக்க அவர் வருடக்கணக்கில் தனது அலுவலகத்தினுள்ளேயே முடங்கிக்கிடந்தமையும் நாள் தோறும் உதயன் நாளிதழை வெளிக்கொணர்ந்தமையுமான வரலாறுகள் இளம் ஊடக சமூகம் கற்றுக்கொள்ளவேண்டியதொன்று.

உதயனில் வெளிவந்த ஆசிரிய தலையங்களை வாசித்தே இதனை கானத்தார் தான் எழுதியதாக அடித்துச்சொன்ன தேசிய தலைமை பற்றி அவருக்கு என்றுமே பெருமையும் புளங்காகிதமுமுண்டு.

உதயன் பத்திரிகை 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட முதல் தனது வாழ்வின் இறுதிக் காலம் வரையிலான 36 வருடங்கள் பிரதம ஆசிரியராக கடமையாற்றியுள்ளமை ஒரு வரலாற்று பதிவே.

நெருக்கடியான கால கட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப்பணியாற்றிய மிக சொற்ப அளவிலான மூத்த ஊடகவியலாளர்களுக்குள் கானமயில்நாதனும் ஒருவர்;.

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் கடந்த 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதியன்று எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் தன்னார்வ அமைப்பின் விருது வழங்கும் விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அதேவேளை ஊடகத்துறையில் தேசியம் சார்ந்து நெருக்கடியாக சூழலில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியமைக்காக கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி யாழ்.ஊடக அமையத்தினால் அவர் வாழும் போதே கௌரவிக்கப்பட்டமையினை பெருமையுடன் நினைவுகூர்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் பிரிவால் துயருற்றிருக்கின்ற குடும்பத்தவர்களிற்கு ஆறுதலையும் யாழ்.ஊடக அமையம் தெரிவித்து நிற்கின்றது.

# ஈழத்துப் பத்திரிகை உலகை துணிச்சலுடன் தூக்கி நிறுத்தியவர். ம.வ.கானமயில்நாதன்

## -யாழ் ஊடக மன்றம் இரங்கல்-

நெருக்கடி காலத்திலும் தமிழ் பத்திரிகை உலகை கம்பீரமாக துணிச்சலுடன் வழிநடத்தியவர் வ.அ.கானமயில் நாதன். தமிழிற்கும் தமிழர்களுக்கும் பத்திரிகைத்துறையில் இவர் செய்த சேவை என்றும் மறக்க முடியாது என யாழ்.ஊடக மன்றம் இரங்கல் வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ம.வ.கானமயில் நாதன் தனது வாழ்நாள் முழுவதையும் பத்திரிகைக்காக அர்ப்பணித்தது மாத்திரமன்றி ஈழத்து பத்திரிகை ஜாம்பவான்கள் என்று குறிப்பிடத்தக்க வீரகேசரியின் ஆசிரியர் எஸ்.கோபாலரட்ணம், தினகரன் பத்திரிகை ஆசிரியர் சிவகுருநாதன், தினபதி பத்திரிகை ஆசிரியர் சிவநாயகம் ஆகியோரின் வரிசையில் தன்னையும் தடம்பதித்தார்.

தனது ஊடக பயணத்தினை வீரகேசரி ஆசிரியர் பீடத்தில் ஆரம்பித்து, தினபதி பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றிய போது தினபதி பத்திரிகை அரசினால் தடை விதிக்கப்பட்டு இடை நிறுத்தப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் பத்திரிகை ஒன்றை நடத்த வேண்டிய தேவை எழுந்த போது 1985 ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை உருவாக்கப்பட்டு, அன்றிலிருந்து தொடர்ச்சியாக 36 வருடங்கள் பத்திரிகைத் துறையில் பிரதம ஆசிரியராக தனது ஊடகப் பணியில் அசைக்க முடியாத முத்திரையை பதித்தார்.

இறுதியாக காலைக்கதிர் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்திலும் பங்களித்தார். சிறந்த வழிகாட்டியாகவும் பண்பாளனாகவும் தன்னை நிலைநிறுத்திய பத்திரிகை ஆசான் இவர்.

ஈழத்து பத்திரிகை வரலாற்றிலேயே தொடர்ச்சியாக ஆசிரியராக இருந்து நெருக்கடியான போர்ச் சூழலிலும் ஊடக அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தனது இலக்கில் சிறிதும் தடம் மாறாது இன்றுவரை பயணித்துக்கொண்டிருந்த மூத்த ஊடகவியலாளர் அ.வ.கானமயில்நாதன் ஊடகப்பரப்பிலுள்ள இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவரது உற்றார் உறவினர் நண்பர்களுக்கு யாழ். ஊடக மன்றம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சீவல் தொழிலாளி மரணம்

பனையால் தவறிவிழுந்த சீவல் தொழிலாளி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச் சம்பவத்தில் இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த நடராசா ஜெயராசா (வயது-48) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சீவல் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவர் தவறி விழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று திங்கட்கிழமை வைத்தியசாலைக்கு சென்று சடலத்தை பார்வையிட்ட பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். உடற்கூற்று பரிசோதனையில் நுரையீரலில் வெடிப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(44)

# ரஞ்சன் ராமநாயக்கவிடம் கையடக்க தொலைபேசி மீட்பு

நோய் நிலமைக்கு சிகிச்சை வழங்குவதற்காக வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரிடம் இருந்து தொலைபேசி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்த அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது அவரிடம் இருந்து கையடக்க தொலைபேசி ஒன்றும், ஹேன்ட் பிரீ ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து மூவரடங்கிய நீதிபதிகள் முன் சமர்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சட்டத்தை மீறாது நினைவேந்த எமக்கு எல்லா உரிமையுமுண்டு

## - வலி.கிழக்கு தவிசாளர் நிரோஸ்-



சட்டம் ஒழுங்கை மீறாத வகையில் நினைவேந்துவதற்கு மக்கள் அச்சப்படத் தேவையில்லை என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

நீதிமன்றத் தீர்ப்பின் பின் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பிரதிநிதிகளான எமக்கு எதிராக பொலிஸ் நிலையங்களால் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ் வழக்குகளில் மதகுருக்கள், சிவில் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகவும் பொலிசார் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

அச்சுவேலி பொலிசாரினால் எனக்கும் உப தவிசாளருக்கும் எதிராகவும் வழக்கு இல (AR1577/21) கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கில், குற்றவியல் சட்டக் கோவை 106 இன் கீழும் பயங்கரவாதத் தடைச்சட்டம், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளையும் நாம் மீறுகின்றோம். தடைசெய்யப்பட்ட அமைப்பான விடுதலைப்புலிகளை நினைவு கூறவுள்ளோம் எனவும் குற்றச்சாட்டுகள் அடுக்கப்பட்டன.

இதனை சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா, திருக்குமரன், மணிவண்ணன் உள்ளிட்ட சட்டத்தரனிகள் குழாம் மறுத்திருந்ததுடன் அரசியலமைப்பின் பிரகாரமாக நினைவேந்தல் உரிமையினை மறுக்கக் கூடாது எனவும் மன்றில் கேட்டுக் கொண்டது. அதேவேளை குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் இவ்விடயத்தினை அணுகமுடியாது எனவும் தெரிவித்தது.

இதன் அடிப்படையில் தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம், குற்றவியல் சட்டக்கோவையின் மேற்படி சரத்தின் பிரகாரம் குற்றம் இழைக்கப்பட்டதற்கான வலுவான சாட்சியங்கள் இணைக்கப்படவில்லை என்றும் அரசியல் அமைப்பு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நினைவு கூர்வதற்கான உரிமையினை மறுக்க முடியாது என்றும் ஏற்கனவே வலுவில் உள்ள சட்ட ஏற்பாடுகளையும் வர்த்தமானி அறிவித்தல்களையும் சகலரும் கடைப்பிடிக்கவேண்டியவர்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. சட்டத்தினை மீறினால் பொலிசார் கைது செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்கத்தின் கீழ் நினைவேந்துவது தடைசெய்யப்படவில்லை. எனவே சட்டத்தை மீறாத வகையில் நாம் நினைவேந்தலைச் செய்ய முடியும். எமது மக்களின் அடிப்படை உரிமைகளைக்கூட மீறிவிட வேண்டும் என்று செயற்படுபவர்கள் நினைவு கூறும் சுதந்திரத்தினைக் கூட அடக்கியாள வேண்டும் எனச் செயற்படுகின்றனர். அவற்றுக்கு மக்கள் அச்சப்படத் தேவையில்லை என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

## இரசாயணப் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் என்ற ரீதியில் முன்னெடுக்கப்படும் சேதனப் பசளை விநியோகம், நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் அனைத்தும், சேதன விவசாயத்துக்கு மாத்திரமே முன்னெடுக்கப்படும் என்றும், ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

இது விடயத்தில் விவசாயிகளுக்கான போதிய தெளிவூட்டல்களை வழங்க வேண்டும். அதேபோன்று, மேற்படி விடயங்களைச் செயற்படுத்தும் போது இடம்பெறக்கூடிய இரசாயனப் பசளை மாஃபியா தொடர்பிலும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அதற்காகப் போராடி சரியானதை வெற்றிகொள்வதற்கு, அதிகாரிகளின் அர்ப்பணிப்பு அத்தியாவசியம் என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

பெரும்போகச் செய்கை மற்றும் சேதனைப் பசளை விநியோகம் தொடர்பில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் அனைத்து மாகாணங்களிலும், நெல் உட்பட ஏனைய பயிர்ச் செய்கைகள் தொடர்பான விவரங்களை, மாவட்ட ரீதியில் அதிகாரிகளிடம் ஜனாதிபதி கேட்டறிந்துகொண்டார். நாட்டில் நிலவிய அதிக மழையுடன் கூடிய வானிலை காரணமாக, மரக்கறி உள்ளிட்ட பெரும்பாலான பயிர்களின் அறுவடைகள் குறைந்துள்ளமை தொடர்பில் இதன்போது எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன், சேதனப் பசளை விநியோகத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, பெரும்போகத்தில் பாதிப்புகள் ஏற்படக்கூடும். இருப்பினும், மாவட்ட ரீதியில் பார்க்குமிடத்து, பயிர்ச் செய்கை நிலங்களில் 70 சதவீதமானவற்றில் பயிரிடல் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

விவசாயிகள் போராட்டங்களை நடத்துவதற்கும் பயிர்ச் செய்கைகளை அவர்கள் தாமதப்படுத்துவதற்கும் காரணம், அவர்களுக்கான போதிய தெளிவூட்டல்கள் வழங்கப் படாமையாகும் என்று ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு விவசாயிகளைத் தெளிவுபடுத்தாமை தொடர்பில், உரிய அதிகாரிகளுக்கு தனது அதிருப்தியைத் தெரிவித்துக்கொண்ட ஜனாதிபதி, போராட்டங்களை முன்னெடுக்கும் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு பசுமை விவசாயக் கொள்கையில் இருந்துகொண்டு தீர்வுகளைக் காண அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார். அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்காத அதிகாரிகள் விலகிச் செல்வதற்கு எந்தத் தடையுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். மனசாட்சியின்படி தெளிவாக வேலை செய்யக்கூடிய குழுவொன்றால் மாத்திரமே இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியுமென்றும், ஜனாதிபதி வலியுறுத்தினார்.

# கொழும்புக்கான மரக்கறி விநியோகம் இடைநிறுத்தம்

மலையக பகுதிகளில் விளைந்த மரக்கறிகள் இன்னும் கொழும்பு மொத்த சந்தைக்கு வரவில்லை என மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

மரக்கறி வகைகளின் விலைகள் வரலாறு காணாத அளவில் அதிகரித்துள்ளதால் குறித்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உர நெருக்கடி காரணமாக மலையக விவசாயிகள் நேற்று முதல் தம்புள்ளை, பேலியகொட மெனிங் சந்தை உள்ளிட்ட பொருளாதார நிலையங்களுக்குக் கையிருப்பில் உள்ள மரக்கறிகளை வழங்கும் நடவடிக்கையை இடைநிறுத்தினர். இதன் காரணமாக பேலியகொட மெனிங் சந்தை மற்றும் பல பொருளாதார நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் மரக்கறிகளின் அளவு, குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அகில இலங்கை விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மெனிங் வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி இதனை தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் மரக்கறி விநியோகம் ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையில், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை மிக அதிகமாக காணப்படுகின்றது.

அதேபோல கட்டுகஸ்தோட்டை - மெனிக்கும்புர பொருளாதார மத்திய நிலையம் மற்றும் பல பொருளாதார நிலையங்களில் மரக்கறி வகைகளின் விலைகள் மிக அதிகமாக காணப்படுகின்றது. மேலும், கொழும்பு - கோட்டையை தளமாகக் கொண்ட சில்லறை விற்பனை நிலையங்களிலும் விலை மிக அதிகமாக காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
செவ்வாய்க்கிழமை 23 நவம்பர் 2021 Tuesday 23rd November 2021

## உணவுப் பாதுகாப்பு சவால்களை தீவிரப்படுத்தும் காலநிலை மாற்றம்

காலநிலை மாற்றம் இப்போது அதிகளவுக்கு பேசுபொருளாகியுள்ளது.காலநிலை மாற்றம் உணவுப் பாதுகாப்பு தொடர்பான சவால்களின்கடுமையான தன்மையை மேலும் அதிகரிக்கச்செய்கிறது . காலநிலை மாற்றத்திற்கும் உணவுப் பாதுகாப்பிற்கும் இடையிலான உறவு சிக்கலானது. காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதுஉண்மையில் கடுமையானதொரு சவாலாகும் .நிலையான விவசாய நடைமுறைகளை உள்ளீர்த்துக் கொள்ளுதல், நகர்ப்புற உணவு பாதுகாப்புக்குஅதிகளவு முக்கியத்துவத்தை கொடுத்தல் ,பொதுமக்கள் சுகாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல், வாழ்வாதார பாதுகாப்பை வழங்குதல், இயற்கை பேரிடர்களின் போது நீண்டகால நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன உணவு பாதுகாப்பு தொடர்பாகமுன்னுரிமைகொடுக்கவேண்டிய விடயங்கள். 1996 ஆம் ஆண்டு உலக உணவு உச்சி மாநாடு உணவுப் பாதுகாப்பை, சகல மக்களுக்கும், சகல நேரங்களிலும்போதுமான, பாதுகாப்பான மற்றும் ஊட்டமளிக்கும் உணவைப் பெறும்போது, அவர்களின் உணவுத் தேவைகள் மற்றும் உணவு விருப்பங்கள் சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்குமென குறிப்பிட்டிருந்தது .

போதுமான உணவு உற்பத்தி மட்டுமே ஒரு நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கு போதுமானதல்ல. பயிர்கள், கால்நடைகள், வனவளம், மீன்வளம் வாழ்வாதாரங்கள் என்பன மிகவும்முக்கியம். வர்த்தக மற்றும் சுகாதார ரீதியான பாதிப்புகள் போன்ற வடிவங்களில் கடுமையான சமூக மற்றும் பொருளாதார விளைவுகள் ஏற்படக்கூடும். உணவு நெருக்கடியால் பாதிக்கப்படும் 48 நாடுகளில் வசிக்கும் சுமார் 108 மில்லியன் மக்கள் 2016 ஆம் ஆண்டில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் அல்லது ஏற்கனவே கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை அனுபவித்து வருகின்றனரென 2016 இல் உணவு விவசாய அமைப்பு தெரிவித்திருந்தது காலநிலை மாற்றம் உற்பத்தியைக் குறைத்து உணவுப்பொருள் தட்டுப்பாட்டை அதிகரிக்கிறது. அசாதாரண மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலை மாற்றங்கள் காரணமாக விவசாயத்தில்பாரிய தாக்கம் ஏற்படுகிறது கடும் வெள்ளம், சூறாவளி வறட்சி போன்ற காலநிலை நிகழ்வுகள் பொதுவானவை. அவைநலிந்தநிலையிலுள்ள மக்களின் வாழ்வாதாரங்களில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. காலநிலை மாற்றத்தின் விளைவுகள் உணவு உற்பத்தியில் மறைமுகமான விளைவுகளையும் ஏற்படுத்தலாம்

உணவுப் பாதுகாப்பின்மை, மக்கள்தொகை சார்ந்த தாக்கங்களிற்கு வழிவகுக்கிறது.உணவுப்பாதுகாப்பிற்கான முக்கியமான அம்சம், உணவுப் பொருள் போதுமான அளவில் கிடைக்கிறதா என்பதல்ல, மாறாக மக்கள் வசமுள்ள பணம் போதுமான அளவு தரமான உணவை அனைவருக்கும் அணுக அனுமதிக்கும் வகையில் உள்ளதா என்பதாகும் . உணவுகையிருப்பு அல்லது உணவு உற்பத்தி, உணவுபொருளுக்கான அணுகல், உணவுப் பொருட்களின் நிலைத்த தன்மை மற்றும் உணவுப் பயன்பாடுபோன்ற உணவுப் பாதுகாப்பின் நான்கு பரிமாணங்களையும் காலநிலை மாற்றம் பாதிக்கிறது. 700 கோடிக்கும் அதிகமான உலக மக்கள்தொகையில் சுமார் 200கோடி மக்கள் உணவுப் பாதுகாப்பற்றவர்களாக உள்ளனர், மேலும்வர ட்சி, அதிக வெப்பநிலை அல்லது அதிக மழைவீழ்ச்சி போன்ற காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வானிலை நிகழ்வுகளின் தீவிரம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் இந்த தீவிர மாற்றங்கள் உணவுப் பாதுகாப்பின்மைக்கு காரணிகளாக உள்ளன என்பதற்கான ஆதாரங்கள் அதிகரித்து வருகின்றனதினசரிசராசரி வெப்பநிலை அதிகரிப்பு உணவு பழுதடைவதை அதிகரிக்கும், குறிப்பாக வெப்பவலயப் பகுதிகளில் அதிகரிக்கும் என்றும் அறிக்கை வலியுறுத்துகிறது. உயரும் வெப்பநிலை, பெரியவர்கள் மற்றும் குழந்தைகளில் வயிற்றுப்போக்கு நோயின் அதிகரித்த நிகழ்வுகளுடன் வலுவான தொடர்புடையதாகக் கூறப்படுகிறது. அதேபோன்று, அதிக மழைவீழ்ச்சி , வெள்ளம் தண்ணீரினால் பரவும் நோய்களின் அபாயத்தை அதிகரிக்கலாம்,

உணவுப் பாதுகாப்பில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் ஏற்கனவே அதிக அளவு பட்டினியால் வாடும் நாடுகளில் மிக மோசமாக இருக்குமென கூறப்படுகிறது.காலநிலை மாற்றத்திற்கு பதிலளிக்கும் வகையில் எதுவும் செய்யாவிடில் உலகளாவிய ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டின் விளைவுகள் சாத்தியமானவை யாகவும் காலப்போக்கில் அதிகரிக்குமெனவும்கூறப்படுகிறது. அத்துடன் உணவுகிடைப்பனவு தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் உள்ளூர் முதல் உலக அளவில் அதிகரிக்கும். ஏனெனில் காலநிலை மாற்றத்தின் அளவு மற்றும் மக்கள் மீதான அதன் விளைவுகளின் அளவு ஆகியவை உலகின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு, ஒரு சமூகத்திலிருந்து மற்றொன்றுக்கு மாற்றம்பெறும் மேலும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களுக்கு இடையே ஏற்றத்தாழ்வு ஏற்படும் தற்போதுகாலநி லை யால் அதிகளவுக்கு பாதிக்கப்படக்கூடிய மக்கள் எதிர்காலத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களாகமாறும் நிலை ஏற்படலாம்.பசுமைக்கு டில் வாயுக்களின் கடந்தகால வெளியேற்றங்களின் விளைவாக எதிர்காலத்தில் 20 முதல் 30 ஆண்டுகள் காலநிலை மாற்றத்திற்கான உறுதியான தன்மையை மனதில் கொண்டு ஏற்படப்போகும் பாதிப்புகளை குறைத்துக்கொள்வதற்கு உலக நாடுகள் ஒன்றுபடவேண்டிய அவசிய ம் மேலெழு ந்துள்ளது.

# 2022 வரவு செலவுத் திட்டமும் கல்வியும்

**கோவிட் காலத்தில் பட்ஜெட் மற்றும் கல்வி பற்றி விவாதிக்கிறது லோ அன்ட் சொசாயற்றி ட்ரஸ்ட்**




## அதிகளவுக்கு முழுமையான, அடிப்படையான திட்டமிடல் தேவை

கோவிட்–19 தொற்றுநோய் இலங்கையில் சமூகத்திலும் பொருளாதாரத்திலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் , தொற்றுநோய்களின் பின்னணியில் தயாரிக்கப்பட்டது, இறுதியாக பொருளாதார நெருக்கடியின்கடுமையான தன்மையை நாட்டின் வரலாற்றில் மிக மோசமான ஒன்றாக கஉற்றுக்கொள்கிறது. நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தமது வரவு செலவுத் திட்ட உரையில் பல தசாப்தங்களாக முன்னெடுத்துச்செல்லப்பட்ட இந்த நெருக்கடியின் படிமுறை ரீதியான தன்மையையும் பொருளாதாரத்தின் கட்டமைப்பு ரீதியானபிரச்சினைகளையும் அடையாளம் கண்டிருந்தாலும், வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட தீர்வுகள் குறைபாடுள்ளதாகவும் முன்னுரிமைகள் தவறாகவும் காணப்படுகின்றன.

லோ அன்ட் சொசைட்டிட்ரஸ்ட் அமைப்பு கடந்த வெள்ளிக்கிழமை19 –11–2021இல் ரேணுகா சிட்டி ஹோட்டலில் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தது. இந்தக் குழுவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர், கொழும்புப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கௌசல்யா பெரேரா, பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ஷாமலா குமார் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். மாநாட்டை லோ அன்ட் சொசைட்டி ட்ரஸ்ட் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சகுந்தலா கதிர்காமர் நெறிப்படுத்தியிருந்தார் .

இலங்கை இன்றுவரை மிக கடுமையான பொருளாதார நெருக்கடியில் உள்ளது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தின் வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 9% மாக அபாயகரமானநிலையில்உள்ளது. ஜனாதிபதிகோத்தாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் அறிமுகப்படுத்தப்பட்ட வரி குறைப்புக்கள் இதற்கு முக்கிய காரணமாகும். உண்மையில், பெரும்பாலான நாடுகளுடன் ஒப்பிடுகையில்,சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கான கொவிட்–19 நிவாரணத்திற்காக இலங்கை ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகவே 2020 ஆம் ஆண்டில்செலவிட்டுள்ளது; இலங்கையின் கோவிட் நிவாரணம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5%க்கும் குறைவாக உள்ளது.

**வடக்கு மற்றும் கல்வி**

செய்தியாளர் மாநாட்டிற்குப்பின்னர் சண்டே மோர்னிங் பத்திரிகையுடன் பேசிய கலாநிதி அகிலன் கதிர்காமர், தொற்றுநோய்களின் போது பெற்றோர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விரிவாகக் கூறியதுடன், 2022 வரவு செலவுத் திட்டம் இந்தப் பிரச்சினைகளைச் சீர் செய்வதற்கு அதிகளவுக்கு செய்யவில்லை என்றுதனது பகிர்ந்து கொண்டுள்ளார் .

கோவிட்–19 நெருக்கடியுடன்,சகல பின்னணிகளையும் சேர்ந்த மாணவர்களும் மோசமான நிலைமையில் உள்ளனரென்று கலாநிதி கதிர்காமர் விளக்கினார். பொருளாதார ரீதியாக, குடும்பங்கள் ,குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள்மிகவும் சிரமங்களை எதிர்கொள்கின்றன. அந்தச் சூழலில், கல்வித் திட்டங்களை இணையவழியில் கொண்டு வருவது பயனுள்ளதாக இருக்காது, ஏனெனில், பலகுடும்பங்களுக்கு, ஒரே ஒரு ஸ்மார்ட் போன் மட்டுமே கிடைக்கிறது. அன்றாடத் தொழிலாளர்கள் உணவுக்கு கஷ்டப்படுகின்றனர் இந்தச் சூழலில், பரந்தளவில் சமூக–பொருளாதாரத்தைப் பார்க்காமல் இணையவழியில்கல்வித் திட்டங்கள் தொடர வேண்டும் என்று எதிர்பார்ப்பதுநலிந்தநிலையிலுள்ள சமூகங்களின்பிள்ளைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

கலாநிதி கதிர்காமர் அவர்கள் அன்றாடத் தேவைகள் மற்றும் இணையவழி தொழில்நுட்பத்தை அணுகுவதைப் பொறுத்து எ மது பிள்ளை கள் மத்தியில் மிகப்பாரிய சமத்துவமின்மை எழுந்துள்ளது என்று கலாநிதி கதிர்காமர்அழுத்தியுரைத்துள்ளார். வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.3% மாக உயர்த்துவதற்குவரவு செலவுத்திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது .ஆனால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் நம்பமுடியாதவை என்று அவர் மேலும் தமது கருத்தை பகிர்ந்து கொண்டுள்ளார்.மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25% க்கும் அதிகமான வருமானத்தை இலங்கை இலக்காகக் கொள்ள வேண்டும் என்று கலாநிதி கதிர்காமர் கருதுகிறார் . வருமானம் வீழ்ச்சியடைந்து வரும் காலகட்டத்தில் அரசாங்க வருவாயை உயர்த்துவதற்கு செல்வ வரி போன்ற நடவடிக்கைகள் தேவை என்று அவர் அறிவுறுத்துகிறார் .

தொற்றுநோய்விடயத்தில் கல்வி ரீதியாக பதிலளிப்பதுஇணையவழியில் அணுகலைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறது என்றும்கலாநிதி கதிர்காமர் கூறியுள்ளார் , நிவாரணத்திற்கான அரசாங்கத்தின் செலவீடு மிகவும் குறைவாக உள்ளதாகவும் நிகரதேசிய உற்பத்தியில் இல் 1.5–27மட்டுமேநிவாரணத்திற்கான செலவீடெனவும் இதற்கு நேர்மாறாக, உலகளாவிய அளவில், தொற்றுநோய்களின் போது நிவாரணம் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16% ஆகுமெனவும்அவர் குறிப்பிட்டுள்ளார் . பொருளாதாரம் மற்றும்எமது அரசாங்க கொள்கைகள் மற்றும் வரி வருமானம் ஆகியவற்றில் பிரச்சனை இருப்பதாக கலாநிதி கதிர்காமர் கருதுகிறார் .

வட இலங்கையின் கல்வி விடயத்தில் வரவு செலவுத்திட்டம்எவ்வாறு ஒரு வகிபாகத்தை கொண்டிருக்கிறது என்பது குறித்து உரையாற்றிய கலாநிதி கதிர்காமர், வட இலங்கை போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னர் அபிவிருத்தியும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ள போதிலும், போரின் அழிவுகள் மோசமானவையென்றும் அது வறுமையின் சுழலில் விழுவதற்கானநலிந்தநிலையில் வடக்கை விட்டுச்சென்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார் . மதிய உணவுப்பொதி தயாரித்தல் மற்றும் கட்டுமானப் பணி போன்ற சிறிய உற்பத்தி வடிவங்களில் குடும்பங்கள் அதிக எண்ணிக்கையில் சார்ந்திருப்பவர்கள் மற்றும் குறைந்த வருமான வடிவங்களைக் கொண்டுள்ளனர். தொற்றுநோய் இந்தசெறிப்ப வருமானத்தைக் கூட சீர்குலைத்துள்ளது, இந்த சூழலில், பல குடும்பங்கள் மற்றும் பிள்ளைகள்ஒரு நாளைக்கு இரண்டு அல்லது ஒரு வேளை கூட சாப்பிட முடியாத நிலையில்உள்ளனர், மேலும்இத்தகைய வறுமைநிலையில், கல்வியில் பிள்ளைகளோ அவர்களின் பெற்றோரோ கவனம் செலுத்தப் போவதில்லை.,வடக்கின் குறிப்பிட்ட பிரச்சனைகள் வினைத்திறனுடன் நீக்கப்பட வேண்டுமெனில், நிவாரண நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொள்ளுமாறுகலாநிதி அழைப்பு விடுத்தார், இதற்கானதன்மை யை வரவு செலவுத் திட்டத்தில் அவர் காணவில்லை.

அரசாங்கச் செலவினங்களில்பெரும்பாலானவை உள்கட்டமைப்பு மற்றும் கிராமப்புறத் தொகுதிகளுக்கான ஜனரஞ்சக நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகின்றன. இரண்டுமே நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்கப் போவதில்லை. இலங்கை போன்ற ஒரு நாடு, உள்சார் கட்டமைப்புச் செலவுகள் மூலம் பொருளாதார நெருக்கடியில் இருந்து தன்னைத் ஊக்குவிக்க விட முடியாது.

**2022 இல் கல்வியில் உலக வங்கியின்வகிபாகம்**

கலாநிதி கௌசல்யா பெரேரா, அரசாங்கத்தின் திட்டத்தின் பெரும்பகுதியானது 'இருதரப்பு மற்றும் பலதரப்பு முகவர் நிறுவனங்களின்' கடன்கள் மற்றும் மானியங்களை அடிப்படையாகக்கொண்டது என்றகருத்தைகலாநிதி கௌசல்யா பெரேராகொண்டிருந்தார் . நிதியமைச்சர் தனது முதல் பட்ஜெட் உரையில் முதன்மை முதல் மூன்றாம் நிலைக் கல்விக்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி ,குவைத் நிதி, ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனம் (ஜெய்கா ), சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனம் (யூஎஸ்எய்ட் ) எரஸ்மஸ் நிதி மூலம் இந்தியா, சவுதி அரேபியா ஐரோப்பியஒன்றியம்மற்றும் கொரியா சர்வதேச கூட்டுறவு நிறுவனம்) முதன்மையாக கல்வி அமைச்சு மற்றும் மறைமுகமாக அரச திறன் மேம்பாடு, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் அமைச்சு மற்றும் பெண்கள் மற்றும் பிள்ளை கள் மேம்பாட்டு அமைச்சு , முன்பள்ளிகள் மற்றும் ஆரம்பக்கல்வி பாடசாலை உள்கட்டமைப்பு மற்றும் கல்வி சேவைகள் இந்த நிறுவனங்களுடன்' நெருக்கமாக' செயற்படுகிறது என்று கூறினார். இவை ஏறக்குறைய இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் நீடிக்கும் திட்டங்களாகும்,மேலும்மொத்த மதிப்பு 250 மில்லியன்டொலர்களாகும் .

உலக வங்கியானது பிரதான கடன் வழங்குபவராக இருப்பதுடன் இலங்கையின் கல்விக்கான கொள்கையின் உந்து சக்தியாகவும் உள்ளது. எனவே, எங்களின் கல்விக் கொள்கைகள் உலக வங்கி எதை முக்கியமாகக் கருதுகிறதோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, தொடர்ந்தும் இருக்கும்; தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் உள்சார் கட்டமைப்பு மேம்பாடுஎன்பன சிறந்த கற்றல் சூழலை வழங்குவதாகவும், தொழில்நுட்ப ஆர்வமுள்ள பணியாளர்களாக இருப்பதற்கான பயிற்சியாகவும் விளக்கப்படுகிறது. முக்கியமாக வெளிநாட்டு முதலீடுகள் மூலம் கல்விக்கு நிதியளிக்க அரசு முடிவெடுக்கும் போது, அதில் பெரும் பகுதி கடன்களாக இருக்கும் நிலையில் ஏற்கனவே நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்குநிலையில் , திடீரென விலகினால் இந்தக்கட்டத்தில் அங்கு , நாட்டின் தேவைகளைப் பற்றி சிந்திக்கத் தொடங்குவதற்கு இடமில்லை

**பாடசாலைகளை ஆரம்பித்தல்**

ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்கு பட்ஜெட்டில் குறிப்பிட்ட ஒதுக்கீடு உள்ளது என்றுகலாநிதி குமார் சண்டே மோர்னிங்குடன் கருத்தை பகிர்ந்து கொண்டார் (நிதி ரீதியாக, இது வேலைநிறுத்தத்தின் போது அவர்களின் கோரிக்கைகளில் மூன்றில் ஒரு பங்காகும், மேலும் இது அரசுமற்றும் ஆசிரியர் சங்கங்களுக்கு இடையே ஏற்பட்ட கூட்டு ஒப்பந்தத்திற்கு இணங்க உள்ளது) வேலைநிறுத்தத்தின் போது ஆசிரியர்களால் எழுப்பப்பட்ட நிர்வாகப் பிரச்சனைகள் போன்ற பிற பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதாகத் தெரியவில்லை.

பாதுகாப்புக் கல்வித் துறைக்கான ஒதுக்கீடுகள் நான்கு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் கலாநிதி குமார் குறிப்பிட்டார், ஆனால் இதன் அர்த்தம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை; மேலும்அதிக தகவல்கள் கிடைக்கும் வரை இது குறித்து மேலும் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார் .

உலகில் பல நாடுகள் நேரடியான கல்விக்கு திரும்பியுள்ள நிலையில், சுய–பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு முறைகள் மூலம் கோவிட்–19 தொற்றுகளின் அதிகரிப்பு இருந்தபோதிலும்பாடசாலைகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ள நிலையில், தேசிய பட்ஜெட்டில் இதே போன்ற நடவடிக்கைக்கு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதா என்றுகேட்கப்பட்ட போது அதற்குப் பதிலளித்தகலாநிதி குமார், பட்ஜெட்டைப் பார்க்கும்போது, தொற்றுநோயைப் பிரதிபலிக்கும் எதையும் குறிப்பாக பார்ப்பது , சாத்தியமற்றது என்றும் இது கவலைக்குரியது எனவும் ஏனெனில் தொற்றுநோய் உலகளாவிய பிரச்சினைஎன்றும் அத்துடன் இது கல்வியில் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளமை பலருக்குத் தெரியுமென்றும் இது ஏற்கனவே நலிவான நிலையிலுள்ள சமூகங்கள் மத்தியில் மிகவும் கடுமையாக உணரப்படுகிறது. இந்தச் சமூகங்களின் கல்விதொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பட்ஜெட்டில் தெளிவான முயற்சி இருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தனியார் கல்விக்கு கடன் மற்றும் வரிச்சலுகைகள் போன்றவற்றில் மானியம் வழங்குவது போன்ற கல்வியை உயர்த்த பட்ஜெட்டில் உள்ள சில நடவடிக்கைகள் இந்த குறிப்பிட்ட ஏற்றத்தாழ்வை நிவர்த்தி செய்யவில்லை. ஏனெனில்,இந்த நடவடிக்கைகள். விளிம்புநிலையிலுள்ள சமூகங்களுக்கு, கல்வியானது இன்னும் தாங்கிக்கொள்ள முடியாததாகவே உள்ளது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இது சம்பந்தமாககலாநிதி குமார் முன்வைத்த ஒரு உதாரணமானது தொற்றுநோயின்போது பல கிராமப்புற பாடசாலைகளில் மதிய உணவு நிறுத்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டாகும். இது சுகாதாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.பாடசாலை செல்லும் வயதுடைய பல பிள்ளைகள் இந்த மதிய உணவையே நம்பியிருக்கிறார்கள், சில தருணங்களில் இதுவே அவர்களின் அன்றைய நாள் ஒரேயொரு உணவாகவும் இருக்கிறது .அதேசமயம் இந்தக் கூற்றுக்களின் உண்மைத் தன்மைதொடர்பாக தன்னால் தனிப்பட்ட முறையில் சான்றளிக்க முடியவில்லை என்று குறிப்பிட்ட கலாநிதி குமார், 2022 பட்ஜெட்டில், முன்பள்ளி பிள்ளைகளுக்கு மட்டும் காலை உணவை வழங்குவதற்கு மட்டுமே ஒதுக்கீடுகள் தெளிவான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும், ஆனால் அதற்கு மேல் எதுவும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லைஎன்றும் கூறியுள்ளார்.. ,இலங்கையின் கல்வி மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை கடந்துசெல்ல உதவும் முழுமையானதும் மற்றும் தீவிரமானதுமான திட்டத்தின் அவசியத்தை கலாநிதி குமார் வலியுறுத்தியுள்ளார்.

பாடசாலைகள் திறந்து வைக்கப்படுவதற்கு தெளிவானமுறையில் ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படாதஅதேசமயம், டிஜிட்டல் கல்விக்கான அணுகலை மேம்படுத்துவதற்கும் தெளிவான முறையில் ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படவில்லை என்றும் கலாநிதி குமார் தனதுகருத்துக்களை பகிர்ந்து கொண்டார். தொழில்நுட்பம் தொடர்பான பல்வேறு விடயங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டாலும், 2021 ஆம் ஆண்டுக்கெனஇணையவழி கல்வியை மேம்படுத்தும் வகையில் செய்யப்பட்டிருந்த சிலஒதுக்கீடுகள். நீக்கப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். இணையவழி கல்வி வெற்றியடையவில்லை என்பதும்,அதனால் அவர்கள் அதை நிறுத்த நினைத்திருக்கக்கூடும் என்பதும் காரணமாக இருக்கலாம் என்றும் கலாநிதி குமார்குறிப்பிட்டுள்ளார். ஆனால் இது குறித்து அரசாங்கத்தால் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

**பிரச்சினையொன்றை அடையாளம் காண்பதென்பது தீர்வு காண்பதல்ல**

வரவுசெலவுத்திட்டம் தொடர்பான தனது ஒட்டுமொத்தக் கருத்துக்களையும் தொகுத்துரைத்த கலாநிதி அகிலன் கதிர்காமர், முன்னைய வரவு செலவுத் திட்டங்களைப் போன்று அல்லாமல், 2022 வரவு செலவுத் திட்டம் தற்போதைய பொருளாதார நிலைமையை சரியாக ஆராய்ந்து இலங்கை மிகவும் கடுமையான நெருக்கடியில் இருப்பதை அடையாளம் கண்டுள்ளதாக குறிப்பிட்டார். எவ்வாறாயினும், பிரச்சினைகள் துல்லியமாக அங்கீகரிக்கப்பட்ட போதிலும், அரசாங்கம் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைக்கவில்லை, மேலும் அவற்றின் முன்னுரிமைகள் தவறாக வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார் . மொத்தத்தில் அடுத்த வருடம் என்ன வரப் போகிறது என்பது தொடர்பாக கலாநிதி கதிர்காமர் கவலையைப் பகிர்ந்துகொண்டுள்ளார் . குறிப்பாக இலங்கை உணவுப் பற்றாக்குறை யை எதிர்கொள்ளும் சாத்தியம் அதிகமெனவும் ஏனெனில் ஒருபகுதி உலகநிலைமையும் இந்த ஆண்டு தொடக்கத்தில் அரசாங்கம் உரத்தடையை அமு ல்படுத்தியமையால் ஏற்பட்ட நெருக்கடியு ம் காரணமெனவும் அவர் தனது கவலையை பகிர்ந்துகொண்டுள்ளார்

த மோர்னிங்



# கிரவல் மண்பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட இடர்பாட்டால் புனரமைப்பு பணிகள் தாமதம்

-மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவிப்பு-



கிளிநொச்சி -வன்னேரிக்குளத்தின் கீழான விவசாய வீதிகளின் புனரமைப்பு பணிகள் நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 மற்றும் கிரவல் மண்பெற்றுக் கொள்வதில் ஏற்படுகின்ற இடர் பாடு என்பவற்றால் புனரமைப்பு பணிகள் தாமதடைந்துள்ளன என மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் ராஜகோபு தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தின் மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள வன்னேரிக் குளத்தின் கீழான விவசாய வீதிகள் கடந்த முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக எந்தவித புனரமைப்புகளுமின்றி அழிவடைந்த நிலையில் விவசாயிகள் கடந்த காலங்களில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வந்துள்ளனர்.

விவசாயிகளின் தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து குறித்த குளத்தின் கீழான சகல விவசாய வீதிகளும் சுமார் 30 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதியுடன் இதற்கான ஒப்பந்த காலம் நிறைவு பெற்றுள்ள நிலையிலும் இந்த வேலைகள் இது வரை நிறைவேற்றப்படவில்லை என விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் ராஜகோபு தெரிவித்ததாவது. குறித்த வேலைத் திட்டமானது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட கொவிட்-19 காரணமாக தாமதடைந்துள்ளது தற்போது 65 வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளன.

மாவட்டத்தில் தரமான கிரவல் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது இருந்த போதும் விரைவாக வேலைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (55)

# மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் ஞானசார தேரர்

-சிறீதரன் எம்.பி சீற்றம்-



விளக்கேற்றக் கேட்கும் தமிழ் அரசியல்வாதிகள் போதைப்பொருளைத் தடுப்பதற்கு தயாராக இல்லை எனவும், நாடாளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதிகள் என்ன செய்கின்றார்கள்? என்றும் 'ஒரே நாடு- ஒரே சட்டம்' செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர், நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ள கருத்து மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாக அமைந்துள்ளது. என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றத்தை மதிக்கத் தெரியாது, இந்த நாட்டின் நீதித்துறையையே அவமதித்த மிலேச்சத்தனமான இனவாதியான ஞானசார தேரர், போதைப் பொருள் ஒழிப்புக் குறித்துப் பேசுவது நகைப்புக்கிடமானதாகவே உள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு, கிழக்கில் 2009 ஆம் ஆண்டுவரை போதைப்பொருள், கஞ்சா, ஹெரோயின் என்ற சொற்பதங்களையே அறியாதவர்களாகத்தான் தமிழ் இளைஞர்கள் இருந்தார்கள். அந்தளவுக்கு தனிமனித ஒழுக்கத்திற்கு விடுதலைப்புலிகள் முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

அத்தகைய கட்டமைக்கப்பட்ட ஒழுக்க விதிகளுக்கு உட்பட்டு வாழ்ந்த தமிழ் இளைஞர்களை திட்டமிட்டு திசைதிருப்பும் நோக்கோடு, இன அழிப்பின் இன்னோர் வடிவமாக, அவர்களை போதைக்கு அடிமையாக்கி இனத்தைச் சீரழிக்கும் கைங்கரியத்தை திட்டமிட்டவகையில் கையாளும் ஞானசாரதேரர் போன்றோர் போதைப்பொருள் தடுப்புக்குறித்து பேசுவதும், அதனோடு மாவீரர்களை நினைவேந்துவதை ஒப்புநோக்குவதும் பொருந்தாத செயலாகும்.

மாவீரர்களை நினைவேந்துவது தமிழர்களின் உயிர்ப்போடும், உணர்வோடும், கலாசார மரபியல்களோடும் இரண்டறக் கலந்த நிகழ்வு. அந்த நினைவேந்தலுக்கான உரிமை மறுக்கப்படுகிறபோது அதற்கெதிராய் குரல் கொடுப்பதென்பது தன்னியல்பு.

எமது உரிமைக் கோரிக்கைக்கு செவிசாய்க்கவே தயாராயில்லாத, எந்நேரமும் இனவாதத்தைக் கக்கும் ஞானசாரதேரரின் இத்தகைய கருத்து, அதிலும் குறிப்பாக மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளில் அவர் தெரிவித்துள்ள இக்கருத்து தமிழர்களின் உணர்வுகளை சீண்டிப்பார்ப்பதாகவே அமைந்துள்ளது.

தென்னிலங்கையில் இருந்த தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களை இடித்தழித்துவிட்டு, தமிழர்களின் பூர்வீக நிலங்களான வெடுக்குநாறி மலையிலும், குருந்தூர் மலையிலும், உருத்திரபுரீஸ்வரத்திலும் பௌத்த சிங்கள அடையாளங்களை நிறுவுவதற்காக கங்கணம் கட்டி நிற்கும் ஞானசேர தேரரை 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணியின் தலைவராக நியமித்தமை இந்த நாட்டிற்கே அவமானம். அந்த நியமனமே இலங்கை அரசின் இனவாத முகத்தை எண்பிப்பதற்கு போதுமான சாட்சியம் ஆகும். நாட்டின் நீதித்துறைக்கு கட்டுப்பட்டு நடக்கத் தெரியாத ஞானசாரதேரருக்கு மாவீரர்களை நினைவேந்துவது குறித்தோ, தமிழ் அரசியல்வாதிகள் குறித்தோ கருத்துரைப்பதற்கு எந்த அருகதையும் இல்லை என்றார். (55)

# கேள்வி அறிவித்தல்
## பருத்தித்துறை பிரதேச சபை சபை நிதி

1. பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) வீதி நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல.04/2016(ii)ற்கு அமைவாக இவ்விலைமனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி(தொலைபேசி இல:- 021 2263276, 021 2262785)** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் ஆங்கில மொழியில் அமைந்துள்ள பூரணமான கேள்வி ஆவணங்களை வேலைநாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை 23.11.2021 - 07.12.2021 வரையான காலப்பகுதியில் பார்வையிடுவதுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி** என்னும் முகவரிக்கு 08.12.2021ம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக, இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் மூலப்பிரதி/இணைப்பிரதி என்பவற்றைக் குறிப்பிட்டு தனித்தனி கடித உறைகளில் இட்டுச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று) நாட்களுக்கு (09.02.2022 வரை) செல்லுபடியாகும்.
8. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
9. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் தலைமை அலுவலகம், பிரதேச சபை, பருத்தித்துறை என்னும் முகவரியில் 30.11.2021அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வற் நீங்கலாக) (மில்லியன்) | | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | NP/14/41(11) /2/7/CF/2021/21 | அல்வாய் மாவடி வீதி அமைப்பு (கொங்கிறீற்) | 0.744 | 2.144 | 75 நாட்கள் | C8 & C7 வீதி | 22,000.00 | 09.03.2022 |
| | | கோகிலன் வீதி புனரமைப்பு (கிரவல்) | 0.700 | | | | | |
| | | நாகர்கோவில் மேற்கு பாடசாலை வீதி புனரமைப்பு | 0.700 | | | | | |
| 2 | NP/14/41(11) /2/7/CF/2021/22 | காளி கோவில் வீதி புனரமைப்பு | 0.733 | 2.121 | 75 நாட்கள் | C8 & C7 வீதி | 22,000.00 | 09.03.2022 |
| | | கொண்டலடி வைரவர் வீதி புனரமைப்பு | 0.644 | | | | | |
| | | நீங்கிட்டி வீதி அமைப்பு | 0.744 | | | | | |
| 3 | NP/14/41(11) /2/7/CF/2021/23 | அணியாவோடை வீதி அமைப்பு (கொங்கிறீற்) | 0.749 | 2.585 | 75 நாட்கள் | C8 & C7 வீதி | 26,000.00 | 09.03.2022 |
| | | கிளானை வீதி புனரமைப்பு | 0.370 | | | | | |
| | | மில் வீதி அமைப்பு | 0.733 | | | | | |
| | | ஏகன்செம்பாடு வீதி அமைப்பு | 0.733 | | | | | |

23.11.2021

**திரு.அ.சா. அரியகுமார்,**
**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**பிரதேச சபை, பருத்தித்துறை.**

# கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) சபை நிதி-2021

1. வலிகாமம் வடக்கு பிரதேசசபை, சபைநிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. தேசியபோட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி புனரமைப்பு, கோருகின்றார்.
4. கேள்விதாரர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், வீதி புனரமைப்பு அமைப்பிற்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவு செய்தவராகவும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** தொலைபேசி:-0212241130, தொலைநகல்:- 0212243688 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 23.11.2021 ஆம் திகதியிலிருந்து 07.12.2021 வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 23.11.2021ஆம் திகதியிலிருந்து 07.12.2021 வரைகாலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்திபெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 07.12.2021ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்/பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வற் நீங்கலாக) (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 1 | NP/14/41(14)/05 /02/156/ CF-31/2021 | சவக்காலை வீதி புனரமைப்பு சீந்திப்பந்தல், இளவாலை வடமேற்கு | 1.815 | 60 நாட்கள் | C9/C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 25.01.2022 | 19000.00 | 22.02.2022 |
| 2 | NP/14/41(14)/ 05 /02/157/ CF -32/2021 | ஆலய வீதி குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு-காங்கேசன்துறை | 1.593 | 60 நாட்கள் | C9/C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 25.01.2022 | 16,000.00 | 22.02.2022 |
| 3 | NP/14/41(14)/05 /02/158/ CF-33/2021 | தேனார் வெளி நீராவிடி வீதி புனரமைப்பு-பலாலி வடக்கு | 0.750 | 60 நாட்கள் | C9/C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 25.01.2022 | 8,000.00 | 22.02.2022 |
| 4 | NP/14/41(14)/ 05 /02/159/ CF-34/2021 | பலாலி தெற்கு குடியேற்ற திட்ட வீதி புனரமைப்பு | 0.640 | 60 நாட்கள் | C9/C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 25.01.2022 | 7,000.00 | 22.02.2022 |
| 5 | NP/14/41(14)/ 05/02/160/ CF-35/2021 | மாவைகலட்டி RDS பின் வீதி புனரமைப்பு | 2.667 | 90 நாட்கள் | C8/C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 08.02.2022 | 27,000.00 | 08.03.2022 |
| 6 | NP/14/41(14)/ 05 /02/161/ CF-36/2021 | தென்மயிலை குறுக்கு வீதி புனரமைப்பு | 1.187 | 60 நாட்கள் | C9/C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 25.01.2022 | 12,000.00 | 22.02.2022 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 30.11.2021 ஆம் திகதி பி.ப.15.00 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

23.11.2021

**திரு.சோ.சுகிர்தன்**
**தலைவர், உள்ளூர் அதிகாரபெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை.**

# நீண்ட நாட்களின் பின்னர் பாடசாலைகளின் செயற்பாடுகள் வழமைக்கு திரும்பியது



நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளிலும் நேற்று அனைத்து வகுப்பு மாணவர்களுக்குமான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது .

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து பாடசாலைகளும் நேற்று முதல் வழமைக்கு திரும்பியுள்ளது கடந்த மாதம் 21ஆம் திகதி தரம் 5 இற்கு உட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த மாதம் 8 ஆம் திகதி முதல் தரம் 11-தரம் 13 வரையான மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முதல் அனைத்து வகுப்பு மாணவர்களுக்குமான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மாவட்டத்தில் உள்ள 129 பாடசாலைகளினதும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் இன்று முதல் வழமைக்கு திரும்பியுள்ளது அந்தவகையில் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட 63 ஆரம்ப பிரிவு பாடசாலைகளினதும் 5 இடைநிலைப் பிரிவு பாடசாலைகளினதும் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 54 ஆரம்ப பிரிவு பாடசாலைகளினதும் 7 இடைநிலைப்பிரிவு பாடசாலைகளினதுமாக மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 129 பாடசாலைகளினதும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுமே இவ்வாறு நேற்று முதல் வழமைக்கு திரும்பியுள்ளது. பாடசாலை செயற்பாடுகள் வழமைக்கு திரும்பியமையானது மாணவர்கள் பெற்றோர்கள் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (71)

## வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 01-30, 2021

உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே



மகாத்மா காந்தி (இந்திய தேசபிதா)

# பாடசாலையில் முதலுதவி சிகிச்சை அறை திறந்து வைப்பு



முல்லைத்தீவு -தண்ணீரூற்று இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில். 1150000 ரூபா நிதியில் இலங்கை விமானப்படையின் சேவா வனிதா பிரிவினரால் அமைக்கப்பட்ட முதலுதவி சிகிச்சை அறை மற்றும் புனரமைக்கப்பட்ட கட்டடம் என்பன மாணவர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டது. தண்ணீரூற்று இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் சிதம்பரப்பிள்ளை சுதந்திரன் தலைமையில். இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு விமானப்படை தளபதி மற்றும் அவரது பாரியார் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு குறித்த முதலுதவி சிகிச்சை அறையினை நாடாவை வெட்டி திறந்து வைத்தனர். நிகழ்வில் விமானப்படை அதிகாரிகள் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# முல்லைத்தீவில் தொற்றினால் மேலும் இருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 44 அகவையுடை மாறா இலுப்பை நெடுங்கேணியினை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட இவர் கொரோனா தொற்று ஏற்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவரின் உடலம் கொரோனா விதிமுறைகளுக்கு அமைய எரியூட்டுவதற்காக நேற்று முன்தினம் வவுனியா பூந்தோட்டம் மின்எரிதகன மேடையில் எரியூட்டுவதற்காக எடுத்து செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கூழாமுறிப்பு பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய முருகன் கோபால் என்பவரும் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

இவரின் உடலமும் எரியூட்டுவதற்காக வவுனியா பூந்தோட்டம் மின் எரிதகன மேடையில் எரியூட்டுவதற்காக எடுத்து செல்லப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை கொரோனா தொற்றினால் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த 55 பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (71)

# மனோ எம்.பி நலம் பெற வேண்டி பூஜை வழிபாடு



ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கொரோனாத் தொற்றியிருந்தது நலம் பெற வேண்டி மயூராபதி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் பூசை வழிபாடுகள் இடம்பெற்றது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும், முன்னாள் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான பிரகாஷ் கணேசனின் தலைமையில், ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதி நிர்வாகச் செயலாளரும் ஜனநாயக இளைஞர் இணைத்தின் செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான விஷ்ணுகாந்தின் ஏற்பாட்டில் கட்சியின் நிதி செயலாளர் கணேஷின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

# சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம் - நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிவநெறிச்செம்மல் சைவப்புலவர் செ.த.குமரன் கந்த புராணமும் ஆறுமுகநாவலரும் என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

# விநாயக ஷஷ்டிப் பெருவிழா

யாழ்ப்பாணம் - நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் விநாயக ஷஷ்டிப் பெருவிழா கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் ஆலயத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை வரை விநாயக ஷஷ்டி விரதத்தினை முன்னிட்டு பஞ்சமுக அர்ச்சனையும், 9ஆம் திகதி வியாழக்கிழமை பெருங்கதை திருவிழாவும் நடைபெறவுள்ளது.

இத்தினங்களில் தினந்தோறும் காலை 6.45 மணியளவில் விஷேட பூசையும்,காலை 7 மணிக்கு விஷேட வசந்தமண்டப பூசையும், தொடர்ந்து பஞ்சமுக அர்ச்சனையும் காலை 8 மணியளவில் பிள்ளையார் கதைப்படிப்பு நடைபெற்று வருகின்றது. (53)

# மன்னாரில் வெடி மருந்துகள் மீட்பு



மன்னாரில் சட்டவிரோத மீன்பிடிக்குப் பயன்படுத்தப்படும் ஒரு தொகை வெடிமருந்துகள் நேற்று முன்தினம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் குறித்த வெடி மருந்துகள் மீன்பிடிக்கு பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

சுமார் 900 கிலோ எடையுடைய 7 ஆயிரம் வரையான வெடி மருந்துகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மன்னார் பகுதியைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட நிலையில் பொலிசார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (75)

# கலைஞர் சுவதம் திட்டத்தில் வடமராட்சி கிழக்கில் வறிய கலைஞர்கள் கௌரவிப்பு



கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வருகின்ற கலைஞர் சுவதம் நிகழ்ச்சித் திட்டத்தில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இவ்வருடம் 10 மூத்த வறிய கலைஞர்கள் உலர்உணவுப் பொதி வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ர.சந்திரலைலா , கிராமமட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் குறித்த கலைஞர்களின் வீடுகளுக்குச்சென்று அவர்களுடைய சுகநலன்கள் விசாரிக்கப்பட்டதுடன், ஒவ்வொருவருக்கும் 3500 ரூபா பெறுமதியான உலர்உணவுப்பொதிகளும் கடந்தவாரம் வழங்கிவைக்கப்பட்டன. (16)

# மேய்ச்சல் தரவை நெருக்கடியைத் தீர்க்கக் கோரிக்கை



கிளிநொச்சி -அக்கராயன் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் தொடர்ச்சியாக இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் 5,000 இற்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ள போதிலும் மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக திருமுறிகண்டி, அக்கராயன், வன்னேரிக்குளம் வீதிகளிற்கு அருகில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துகின்ற நிலைமை காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கடந்தாண்டு திருமுறிகண்டி, அக்கராயன், வன்னேரிக்குளம் வீதிக்கு அருகில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துமாறு தற்காலிக தீர்வு ஒன்றினை அறிவித்திருந்தது.

இப்பகுதியிலும் கூடுதலான நிலப் பரப்பிலும் விவசாய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதன் காரணமாக கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் கால்நடை வளர்ப்பாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளாக கிளிநொச்சி மாவட்டத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகளில் ஒன்றாக மேய்ச்சல் தரவை பிரச்சினை காணப்படுகின்றது. இதன் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மாவட்டத்தின் பயிர்ச் செய்கை எவ்வளவு முக்கியமோ அதே போன்று கால்நடை வளர்ப்பும் முக்கியமானதாக காணப்படுகின்றது. மேய்ச்சல் தரவைகளுக்கான இடங்களை கிளிநொச்சி மாவட்டச் செயலகம் இனங்காட்ட வேண்டும் என்பதே கால்நடை வளர்ப்பாளர்களின் கோரிக்கையாகும் (27)

# அருளாசியுரையும் வேதபாராயண நிகழ்வும்

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வருகின்றது. இவ் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், இன்று காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் புங்குடுதீவு கண்ணகி அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலின் பிரதம குருக்கள் ச.மதுசூதனக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# சாவகச்சேரியில் மேலும் ஒரு கொவிட் தொற்றாளர் மரணம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கொரோனா நோயாளர் விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த 52வயதான பெண் ஒருவர் நேற்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தமோதரம்பிள்ளை வீதி சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 52வயதான கமலாதேவி என்ற பெண்ணே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (13)

# துணுக்காயிற்கு பேருந்து சேவை வேண்டும் என கோரிக்கை

கிளிநொச்சியில் இருந்து துணுக்காயிற்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவையினை மீளவும் நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டிற்கு முன்னர் கிளிநொச்சி நகரத்தில் இருந்து இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து கொக்காவில், புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், துணுக்காய் வரை பயணித்ததாகவும் போர்ச்சூழல் காரணமாக பின்னர் பேருந்து சேவை இடம் பெறவில்லை எனவும் கடந்த பத்தாண்டுகளாக குறித்த பேருந்து சேவையினை நடத்துமாறு கூட்டங்களில் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் பேருந்து சேவை நடைபெறவில்லை.

இப்பேருந்து சேவை நடைபெறுமானால் புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, தேறாங்கண்டல் ஆகிய பாடசாலைகளுக்குச் செல்கின்ற ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் நன்மை அடைவார்கள். மல்லாவி ஆதார வைத்தியசாலை, கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு இக்கிராமங்களில் இருந்து இலகுவாக மக்கள் வந்து செல்லக் கூடியதாக இருக்கும். தற்போது மேற்படி கிராமங்களுக்கு பேருந்து சேவைகள் நடைபெறுவதில்லை. மக்கள் சுயமாகவே போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர். துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் பேருந்து சேவை நடத்துவோம் என வாக்குறுதிகள் வழங்கிய அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் பேருந்து சேவை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (27)

# உணவுப் பொதி - தேநீர் ஆகியவற்றின் விலைகள் நாளை முதல் அதிகரிக்கிறது..!



நாட்டில் உணவுப் பொதி மற்றும் தேனீர் ஆகியவற்றின் விலைகள் நாளை தொடக்கம் அதிகரிக்கும் என அதிகரிக்கப் பட்டுள்ளது.

தேசிய சிற்றுண்டிசாலை உரிமையாளர்கள் சங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதன்படி பகலுணவுப் பொதி ஒன்றின் விலையை 20 ரூபாவினாலும், ஒரு கோப்பை தேநீரின் விலையை 5 ரூபாவினாலும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளை முதல் இந்த விலை அதிகரிப்பு அமுலாகும் என அச்சங்கம் தெரிவித்துள்ளது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்; பூஜித ஜயசுந்தரவுக்கு எதிராக 855 குற்றச்சாட்டுகள்



முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான எச்சரிக்கை அறிவிப்பு கிடைத்தும் அதை தடுத்து நிறுத்த சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. என்ற குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு எதிரான வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

குறித்த சம்பவம் தொடர்பாக முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக 855 குற்றச் சாட்டு கள் அடங்கிய குற்றப்பத்திரம், கொழும்பு மூவரடங்கிய நிரந்தர நீதாய நீதிமன்றில் வாசிக்கப்பட்டது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு எதிராகவும் 855 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டுள்ளதுடன், வழக்கு விசாரணை நேற்று பிற்பகல் 1.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

# பிரதேச சபை உறுப்பினர் போதையில் ரகளை மின் கம்பத்தில் கட்டி நையப்புடைத்த மக்கள்!



பாணந்துறை பிரதேசசபை உறுப்பினர் ஒருவரை வீதியோர மின்கம்பத்தில் கட்டிவைத்து நையப்புடைத்த பொதுமக்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்திருக்கின்றனர்.

குறித்த சம்பவம் கல்பொத்த பிரதேசத்தில் மது அருந்திய நிலையில் அநாகரிகமான முறையில் நடந்து கொண்டு பொது மக்களுக்கு தொந்தரவு செய்தமையால் அப்பகுதி பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை பிரதேச மக்கள் கயிற்றினால் கட்டி களுத்துறை வடக்கு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பிரஸ்தாப நபர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாணந்துறை பிரதேச சபை உறுப்பினர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேச சபை உறுப்பினர் சில குழுக்களுடன் கல்பொத்த பிரதேசத்துக்குச் சென்று மது அருந்தினார் என்றும் அவர் கல்பொத்த பஹருபொல பிரதேச வாசிகளிடம் அநாகரிகமான முறையில் துன்புறுத்தும் வகையில் நடந்து கொண்டதாகவும் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசசபை உறுப்பினரை பிரதேசவாசிகள் கயிற்றினால் மின் கம்பத்தில் கட்டி வைத்து பொலிஸாரின் அவசர இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு

தகவல் வழங்கியுள்ளனர். அதன்படி சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சந்தேக நபர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன்

பரிசோதனை மூலம் அவர் மது அருந்தியிருந்தமை தெரியவந்துள்ளது.

# கரைதுறைப்பற்று, பிரதேசசபை முல்லைத்தீவு 2022ஆம் ஆண்டிற்கான மீள்கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை, கருவாட்டுக்கடைகள், தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடங்கள் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி** :- 23.11.2021 தொடக்கம் 08.12.2021 பி.ப. 2.30 மணிவரை
**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** :- 09.12.2021 முற்பகல் 10.00 மணிவரை
**கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி** :- 09.12.2021 முற்பகல் 10.30

1. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை தவிசாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 09.12.2021 முற்பகல் 10மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 09.12.2021 முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில், அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா. | ஏற்றுக்கொள்ளக் கூடியதாகக் குறைந்த கேள்வித்தொகை (VAT, NBT) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| | 01.முள்ளியவளை உப அலுவலகம் | | | | |
| 1 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 1,500.00 | 50,000.00 | - | 2,534,400.00 |
| 2 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 1,000.00 | 5,000.00 | - | 85,300.00 |
| 3 | சிலாவத்தை பொதுச்சந்தை | 1,000.00 | 5,000.00 | - | 69,100.00 |
| 4 | கேப்பாபிலவு பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | - | 8,000.00 |
| 5 | முள்ளியவளை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 2,000.00 | 436,500.00 |
| 6 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 30,000.00 | 1,800.00 | 1,729,600.00 |
| 7 | தண்ணீரூற்று கருவாட்டுக்கடை | 1,000.00 | 2,000.00 | 1,800.00 | 16,500.00 |
| 8 | சிலாவத்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | - | 316,800.00 |
| 9 | கேப்பாபிலவு கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 1,000.00 | 7,200.00 |
| 10 | தண்ணீரூற்றுசந்தை வாகனத்தரிப்பிடம் | 1,000.00 | 5,000.00 | - | 40,000.00 |
| | 02.முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 1,500.00 | 40,000.00 | - | 1,220,100.00 |
| 2 | முல்லைத்தீவு கோழி இறைச்சிக்கடை | 1,500.00 | 40,000.00 | 2,000.00 | 1,245,000.00 |
| 3 | முல்லைத்தீவுசிறுவர்பூங்கா, சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 3,000.00 | 2,500.00 | 594,000.00 |
| | 03.கொக்கிளாய் உப அலுவலகம் | | | | |
| 1 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 1,000.00 | 267,300.00 |
| 2 | கொக்குத்தொடுவாய் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | - | 4,000.00 |
| | 04.முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | | |
| 1 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 1,000.00 | 60,600.00 |
| 2 | முள்ளிவாய்க்கால் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 1,000.00 | 5,000.00 |
| 3 | முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | - | 5,000.00 |
| 4 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | - | 63,400.00 |
| | 05.செம்மலை உப அலுவலகம் | | | | |
| 1 | அளம்பில் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | - | 18,500.00 |
| 2 | குமுழமுனை பொதுச்சந்தை | 1,000.00 | 10,000.00 | - | 213,400.00 |
| 3 | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 12,000.00 | 2,000.00 | 357,000.00 |
| 4 | குமுழமுனை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 1,000.00 | 39,600.00 |
| 5 | செம்மலை பொதுச்சந்தை | 1,000.00 | 3,000.00 | - | 27,900.00 |
| 6 | செம்மலை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 1,000.00 | 10,600.00 |
| 7 | அளம்பில் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 4,000.00 | 2,000.00 | 67,500.00 |

க.விஜிந்தன்,
தவிசாளர்,
கரைதுறைப்பற்று, பிரதேசசபை
முல்லைத்தீவு.

23.11.2021

# அருட்தந்தை சிறில் காமினிக்கு ஆதரவாக கவனயீர்ப்பு போராட்டம்



அருட்தந்தை சிறில் காமினி அடிகளார் 3 ஆவது நாளாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு நேற்று திங்கட்கிழமை அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட நிலையில், அருட்தந்தை தொடர்ந்தும் விசாரணைக்கு ட்படுத்தப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து

நேற்று கொழும்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு முன்பாக அருட்தந்தையர் கள், அருட்சகோதரிகள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

# ஒரு வாகனத்தில் குறைந்தது 3 பேர் பயணிக்க வேண்டும்..!

## -அமைச்சர் தயாசிறி புதிய யோசனை-

நாடு அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதுடன் எரிபொருள் இறக் குமதியில் சிக்கல் ஏற்பட்டிருக்கும் நிலையில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜய சேகர புதிய யோசனையொன்றை சமர்ப்பித்துள்ளார்.

ஒரு வீதியில் பயணிக்கும் வாகனத்தில் குறைந்தது மூன்று பேராவது பயணிக்க வே ண்டும் என தாம் முன்மொழிவதாக அமைச்சர் கூறுகிறார். குருநாகலில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே

அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது மேலும் அவர் கூறுகையில், இலங்கையில் வீதியில் வாகனம் நிறுத்தப்பட்டால், அந்த வாகனத்தில் மூன்று அல்லது நான்கு பேர் இருக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வர வேண்டும்.

ஏனெனில் ஒரு வாகனத்தில் ஒருவர் ஏறும் நிலை உள்ளது. இதனால் அதிகளவு எரிபொருள் எரிகிறது. இந்த நேரத்தில் வாகனங்களை இறக்குமதி செய்வது பற்றி யோசிக்காமல் வீதியில் இருக்கும் வாகனங்களைப் பயன்படுத்த முன், ஒரு முறைக்கு இரு முறை யோசிக்க வேண்டும் என அமைச்சர் மேலும் கூறினார்.

# வெளிவிவகார அமைச்சு கொன்சியூலர் அலுவலக சான்றிதழ் சேவைகள் 150 பேருக்கு வரையறை..!

வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் விவகார பிரிவின் இலத்திரனியல் ஆவணச் சான்றிதழ் வழங்கும் சேவைகள் நேற்று தொடக்கம் 150 பேருக்குள் வரையறுக்கப் பட்டிருக்கின்றது.

மின்னணு ஆவணச் சான்றளிப்பு முறைமையில் (e-DAS) ஏற்பட்ட கோளாறு காரணமாக கடந்த சில நாட்களாக பொதுமக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வெளி விவகார அமைச்சு வருத்தம் தெரிவித்துள்ளது.

மேலும், பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் கிளை சான்றளிப்பு முறைமையும் பாதிக்கப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சு தற்போது நிலைமையைச் சரிசெய்வதில் ஈடுபட்டுள்ளதுடன்,

அதுவரை சான்றளிப்பு சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைகள் சீர் செய்யப்பட்டவுடன் சான்றிதழ்கள் / ஆவணங்களின் சான்றளிப்புக்கான சாதாரண சேவைகள் வழங்கப்படும் என்றும், கணினிப் பராமரிப்பு சார்ந்த பணிகள்

நிறைவடைந்தவுடன், புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள 011-2338812 அல்லது dgcons@mfa.gov.lk மூலம் கொன்சி யூலர் விவகாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.


# சேவை நலன் பாராட்டு



திருமதி வசந்தாதேவி அருளானந்தம்
(SLTS I,B.A(Hons),PGDE)
பகுதித் தலைவர்

முபத்தாறு ஆசிரியப் பணியில் ஏற்றமிகு
மாணவரை உருவாக்கி
நாவார போற்றும் மாணவர் தம் இதயம் நிறைந்து
பாமாலை சூட்டிப் பணிக்கேத்திப் புகழ்ந்து பாட ஓய்வு கண்டு
போம்போதில் நாம் கூடிப்போற்றுகின்றோம் வாழி வாழி


பகுதித் தலைவராய் உப அதிபராய் உவந்து பணிசெய்து
மிகுதிப் பொழுதெல்லாம் மாணவரே நினைவாய் நிறைந்து
முகாமைத்துவத்துக்கு ஒரு துணையாய் ஒழுக்கம் தனைப்பேணி
மகத்தான பணியால் விளையாட்டுப்போட்டி பரீட்சைகள் என்று
போற்றும் படி நன்றாய் பணிசெய்த திறன் வியந்து
ஏற்றமுற்று வாழ்கவென வாழ்த்துகிறோம் வாழி வாழி

ஆசிரியர் நலன்புரிச்சங்கம், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை,பருத்தித்துறை.



# இருபத்தாறு ஆண்டுகள் நீங்கா நினைவில்

தோற்றம்
03
11
1941



மறைவு
23
11
1995



தோற்றம்
18
08
1983

அமரர். கனகசபை சண்முகசுந்தரம் (சோமு)
(ஸ்தாபகர், சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்)

அமரர். சண்முகசுந்தரம் சிவரூபன் (டியூக்கோ)
(மாணவன் - யா/வைத்தீஸ்வரா கல்லூரி)

இருவரும் இங்கிருந்து இறையுலகு சென்று
இருபத்தாறு ஆண்டுகள் ஆறாய் ஓடிடினும்
உருக்கமுடன் உங்களை எங்கள் மனதிலிருத்தி
பெருமானை வழிபட்டு பெறுகின்றோம் ஆறுதலை

துர்க்கா இல்லம்,
இல.29, ஓட்டுமடம் வீதி, ஓட்டுமடம்.
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# நியூஸிலாந்து ரி-20 தொடரை முழுமையாக வென்றது இந்தியா





கொல்கத்தாவில் நடந்த மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டியில் இந்திய அணி 73 ஓட்டங்களினால் நியூசிலாந்தை வீழ்த்தி 3-0 என்ற கணக்கில் தொடரை வென்றது.

அதேநேரம் ரி-20 போட்டியில் ஓட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் நியூசிலாந்துக்கு எதிராக இந்தியா பெற்ற மிகப்பெரிய வெற்றி வித்தியாசம் இது வாகும்.

நேற்று முன்தினம் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 187 ஓட்டங்களை பெற்றது.

அணி சார்பில் அதிகப்படியாக ரோகித் சர்மா 56, இஷான் கிஷன் 29, ஸ்ரேஸ் அய்யர் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

188 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து, 17.2 ஓவர்களில் 111 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

மார்ட்டின் குப்தில் மாத்திரம் 51 ஓட்டங்களை எடுத்தார். ஏனைய வீரர்கள் அனைவரும் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தனிர்.

பந்து வீச்சில் அசத்திய அக்ஸர் படேல் 3 விக்கெட்டுகளையும், ஹர்ஷல் படேல் 2 விக்கெட்டுகளையும், தீபக் சஹர், சாஹல் மற்றும் வெங்கடேஷ் அய்யர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினை கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 3:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

# இளையோர் தேசியமட்ட கபடிப் போட்டி கிளி. மாவட்ட பெண்கள் வெண்கலம்



33 ஆவது தேசிய மட்ட கபடிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணி 3 ஆம் இடத்தைக் கைப்பற்றினர்.

மாவட்ட இளைஞர் அணிகளுக்கிடையிலான 33 ஆவது தேசிய மட்ட பெண்களுக்கான கபடிப் போட்டிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

3 ஆம் இடத்திற்கான போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணியை எதிர்த்து குருநாகல் மாவட்ட பெண்கள் அணி மோதியது.

இரு அணிகளும் வெற்றிக்காக பலத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இருப்பினும் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணி ஆட்ட நேர முடிவில் 35:28 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினர். (21)

# யாழ். மாவட்ட இளையோர் கிரிக்கெட் பருத்தித்துறை அணி சம்பியன்



யாழ். மாவட்ட பிரதேச செயலக இளைஞர் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

பொன்னாலை விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக இளைஞர் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றனர்.

அவ்வணி சார்பில் அதிகபட்சமாக நிருபன் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும், ராஜா 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நல்லூர் பிரதேச செயலக இளைஞர் அணி சார்பில் பிரதாப் 3 இலக்குகளையும், நிமல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக இளைஞர் அணி 6 இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். அவ்வணி சார்பில் அதிகபட்சமாக கிசாந் 24, நிமல் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் அணி சார்பில் திஷாந் 2 இலக்குகளையும், ஜனன், ராஜா, கலை ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர். (21)

# ரி20 போட்டிகளில் அதிக அரைசதம் கோலி சாதனையை முறியடித்த ரோகித்



கொல்கத்தாவில் நேற்று நடந்த நியூசிலாந்துக்கு எதிரான 3 ஆவது ரி20 போட்டியில் கப்டன் ரோகித் சர்மா 56 ஓட்டங்கள் விளாசினார். இது ரோகித் சர்மாவின் 30 ஆவது அரை சதமாகும்.

இதன்மூலம் ரி20 போட்டிகளில் அதிக அரை சதம் அடித்தவர் என்ற விராட் கோலியின் சாதனையை ரோகித் சர்மா முறியடித்துள்ளார். இந்தப் பட்டியலில் ரோகித் சர்மா 30 அரை சதத்துடன் முதல் இடத்தில் உள்ளார். விராட் கோலி 29 அரை சதத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். பாபர் அசாம் 25 அரை சதத்துடம் மூன்றாவது இடத்தில் உள்ளார். மேலும், சர்வதேச ரி20 போட்டிகளில் 150 சிக்சர்கள் விளாசிய இரண்டாவது வீரர் என்ற மைல்கல்லையும் ரோகித் சர்மா எட்டியுள்ளார். ரி20 போட்டிகளில் 4 சதங்கள் அடித்த ஒரே வீரர் என்ற சாதனையையும் ரோகித் சர்மா தன்வசம் வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பந்தை எறிந்து காயப்படுத்திய பாக். வீரர் அப்ரிடிக்கு அபராதம்



வங்காளதேச அணி துடுப்பாட்ட வீரரின் காலில் வேண்டுமென்றே பந்தை எறிந்து காயப்படுத்திய பாகிஸ்தான் வீரர் ஷகீன் ஷா அப்ரிடிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வங்காளதேசம் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 ரி20, 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இரு அணிகளும் மோதிய முதல் ரி20 போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. அதனை தொடர்ந்து டாக்காவில் நடந்த 2 ஆவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டியிலும் பாகிஸ்தான் வெற்றி பெற்றது.

இந்த போட்டியின் போது வங்காளதேச அணியின் துடுப்பாட்ட வீரர் அபிப் ஹூசைன் மீது வேண்டுமென்றே பந்தை எறிந்து காலில் காயத்தை ஏற்படுத்திய பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஷகீன் ஷா அப்ரிடிக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 15 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. முந்தைய பந்தில் அபிப் சிக்சர் அடித்ததால் கோபத்தை அப்ரிடி இந்த வகையில் வெளிப்படுத்தி நடவடிக்கையில் சிக்கி இருக்கிறார்.

-கடைசி பந்தில் ஷாருக்கான் சிக்சர்-

# சையது முஸ்தாக் அலி ரி-20 கிண்ணத்தை வென்றது தமிழ்நாடு




சையது முஸ்தாக் அலி கிரிக்கெட் போட்டியில் கர்நாடகா அணிக்கு எதிரான இறுதி போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் தமிழ்நாடு அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

சையது முஸ்தாக் அலி கிண்ணத்துக்கான இறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு-கர்நாடகா அணிகள் நேற்று மோதின. தமிழக அணி கப்டன் விஜய் சங்கர் நாணயச்சுழற்சியில் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தார்.

இதனையடுத்து கர்நாடகா அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 151 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக மனோகர் 46 ஓட்டங்கள் எடுத்தார். தமிழக அணி தரப்பில் சாய் கிஷோர் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். 152 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தமிழக அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக ஹரி நிஷாந்த்-ஜெகதீஷன் களமிறங்கினர். முதல் ஓவரில் 9 ஓட்டங்கள் எடுத்து சிறப்பான தொடக்கத்தை கொடுத்தனர். சிறப்பாக ஆடி வந்த நிஷாந்த் ரன் அவுட் முறையில் வெளியேறினார். அவர் 12 பந்துகளில் 23 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 2 சிக்சர் 1 பவுண்டரி அடங்கும்.

அடுத்து வந்த சுதர்சன் 9, சஞ்சய் யாதவ் 5, முகமது 5, என சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தனர். 15 ஆவது ஓவரில் விஜய் சங்கர் 18, ஜெகதீஷன் 41 அடுத்தடுத்து வெளியேறினர்.

அதிரடியாக விளையாடிய ஷாருக்கான் தமிழக அணிக்கு வெற்றியை தேடி தந்தார். கடைசி ஓவரின் கடைசி பந்தில் 5 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஷாருக்கான் பந்தை சிக்சருக்கு பறக்க விட்டு அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்றார். அவர் 15 பந்துகளில் 33 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 1 பவுண்டரி 3 சிக்சர் அடங்கும்.

சையது முஸ்தாக் அலி கிண்ணத்தை தமிழ்நாடு அணி 3 ஆவது முறையாக கைப்பற்றியுள்ளது.

# தேசியமட்ட கபடிப் போட்டி; யாழ். பெண்கள் அணி வெள்ளி



33 ஆவது தேசிய மட்ட கபடிப் போட்டியில் யாழ் மாவட்ட இளைஞர் பெண்கள் அணி பலத்த போராட்டத்தில் 2 ஆம் இடத்தை பெற்றுள்ளனர்.

இளைஞர் மாவட்ட அணிகளுக்கிடையிலான 33 ஆவது தேசிய மட்ட இளைஞர் மாவட்ட பெண்களுக்கான கபடி போட்டிகள் கிளிநொச்சி மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் யாழ் மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து கேகாலை மாவட்ட இளைஞர் அணி மோதியது. யாழ். மாவட்ட அணியினர் வெற்றிக்காக பல நுட்பங்களை பயன்படுத்திய போதிலும் இருப்பினும் ஆட்ட நேர முடிவில் 24:31 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் யாழ்.மாவட்ட இளைஞர் அணி தோல்வியடைந்து. 2 ஆம் இடத்தை பெற்றனர். (21)






புலிகளின் கொடி தினத்தை முன்னிட்டு புலம்பெயர் நாடான பிரித்தானியாவில் புலம்பெயர் தமிழர்களால் கொடிதினம் கொண்டாடப்பட்டமையை படங்களில் காணலாம் ...

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அறிகுறியுடைய மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பாதீர்கள்

## -கோருகிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்-



காய்ச்சல், தடிமன் அல்லது இருமல் போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

காய்ச்சல், தடிமன் அல்லது இருமல் போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என்று பெற்றோரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

அதே போன்று பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளையுடைய பெற்றோரில் எவரேனும் இதுவரையில் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லையெனில் இப்போதாவது பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம்.

காரணம் பெற்றோர் தடுப்பூசியைப் பெறாமல் இருப்பார்களாயின் தொற்றுக்கு உள்ளாகக் கூடிய வாய்ப்பு அதிகமாகும். பெற்றோர் தொற்றாளர்களானால் நிச்சயம் அது குழந்தைகளையும் பாதிக்கும். எனவே தான் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

எதிர்பாராத விதமாக பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் , செயற்பட வேண்டிய முறைமை குறித்து பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி உள்ளிட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

# இரசாயன உரம், கிருமி நாசினிகளை இறக்குமதி செய்ய அனுமதியில்லை

## -உறுதிபடக் கூறுகின்றார் மஹிந்தானந்த-



பெரும்போக விவசாயத்திற்காக உரிய தரத்திலான இரசாயன உரம் மற்றும் கிருமி நாசினிகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதித் கே ஜெயசிங்க தெரிவித்திருந்த நிலையில் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அதனை மறுத்துள்ளார்.

நெல் மற்றும் ஏனைய மரக்கறிகள் உள்ளிட்ட பெரும்போக பயிர் செய்கைக்கான இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதாக விவசாய அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதித் கே ஜெயசிங்க நேற்று முன்தினம் காலையில் தெரிவித்திருந்தார்.

எனினும் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும், இரசாயன உரத்தை இறக்குமதி செய்ய இன்னமும் தீர்மானிக்கவில்லை எனவும் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறியுள்ளார்.

அதேபோல் சீனாவில் இருந்து இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்ட உரத்தின் தரத்தில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக அது மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ள போதிலும் அதற்கான நட்டஈடு வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும், 6 பில்லியன் ரூபா அதற்கான நட்டஈடு வழங்க வேண்டியுள்ளதாகவும், அதேபோல் மீண்டும் தரத்தை உறுதி செய்த உரம் அதே சீன நிறுவனத்திடம் இருந்தே இறக்குமதி செய்யப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# கொழும்பு - கண்டி தொடருந்து சேவைகள் மீண்டும் ஆரம்பம்

இடைநிறுத்தப்பட்டிருந்த கொழும்பு - கண்டி தொடருந்து சேவை நேற்று திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திலிருந்து நேற்று முதல் 5 தொடருந்து சேவைகள் இடம்பெறவுள்ளன. இருப்பினும் நேற்று கொழும்பு - கண்டி பிரதான வீதியின் கீழ் கடுகண்ணாவ பகுதி ஊடாக ஒரு வழி போக்குவரத்து மட்டுமே இடம் பெற்றதாக கேகாலை மாவட்ட செயலாளர் மகிந்த எஸ்.வீரசூரிய தெரிவித்துள்ளார். மூடப்பட்டுள்ள வீதியில் தொடர்ந்தும் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காணி ஒன்றில் இருந்து கைக்குண்டு மீட்பு

திருகோணமலை தனியார் காணி ஒன்றில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியாருக்குச் சொந்தமான காணியை துப்புரவு செய்து கொண்டிருக்கும் போது இந்த கைக்குண்டை கண்டதாகவும் அதனை அடுத்து பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்தியதாகவும் தெரிய வருகின்றது.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு சென்ற பொலிஸாரால் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. குறித்த கைக்குண்டை வெடிக்க வைக்க கந்தளாய் நீதிமன்றத்தின் அனுமதியை பெற உள்ளதாகவும் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாட்டில் தொழில் வாய்ப்பில்லாமல் 9.2 சதவீதமானோர் தவிப்பில்

## -தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தகவல்-

நாட்டில் 25 மற்றும் 29 வயதுக்கு உட்பட்டவர்களில், 9.2 சதவீதமானவர்கள் தொழில் வாய்ப்பின்றி இருப்பதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் புதிய தரவுகள் தெரிவிக்கின்றன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் கற்றவர்களில் 7.2 சதவீதமானவர்கள் தொழில் வாய்ப்பின்றி உள்ளனர். இதே வேளை, கல்விப் பொதுத் தராதர உயர் தரம் மற்றும் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்களில் 9.1 சதவீதமானவர்கள், தொழில் வாய்ப்பு இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தின் புள்ளிவிபரங்களின் படி, நான்கு பேரைக் கொண்ட ஒரு குடும்பத்தின் உணவு தேவைகளுக்காக மட்டும் மாதமொன்றுக்கு 44,020 ரூபாய் தேவைப்படுகிறது. இந்நிலையில், வடக்கு மாகாணத்தில் தொழில்வாய்ப்பின்மை பிரச்சினை மேலும் உக்கிரமடைந்துள்ளது என அறியமுடிகிறது. ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தொழில்வாய்ப்புகளை எதிர்பார்த்துள்ளனர். இதேவேளை, அரச ஊழியர்கள் எவரும் அடுத்தவருடம் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள் என அரசாங்கம் அறிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்க முடியுமான பல தொழிற்சாலைகள் வடக்கில் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

1990 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தம் காரணமாக யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை, சீமெந்து தொழிற்சாலை முற்றாக செயலிழந்தது.சுமார் 29 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் இந்த தொழிற்சாலை சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மூடப்பட்டதையடுத்து, சுமார் 1,500 ஊழியர்கள் வேலை இழந்து நிர்க்கதியாகினர். முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், பண்டாரவன்னியன் ஓட்டுத்தொழிற்சாலை 1968 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதின்று திறந்து வைக்கப்பட்டது.

நாட்டின் ஓடுகளின் கேள்வியை நிவர்த்தி செய்வதற்காக திறந்துவைக்கப்பட்ட இந்த தொழிற்சாலையில், அன்று 74 நிரந்தர ஊழியர்களும் 100 இற்கு மேற்பட்ட தற்காலிக ஊழியர்களும் பணிபுரிந்தனர். பலரின் வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாகவிருந்த ஓட்டுத்தொழிற்சாலை யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு முற்றாக செயலிழந்தது.

தீவகம் அல்லைப்பிட்டி அலுமினிய தொழிற்சாலை, வலிகாமம் வடக்கு மாவிட்டபுரத்தில் உள்ள அலுமினிய தொழிற்சாலைகள், யுத்தத்தின் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. இந்த தொழிற்சாலைகளிலும் நூற்றுக்கணக்கானவர்கள் தொழில்புரிந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் தவறி விட்டது

## -சாடுகிறார் சுசில் பிரேமஜெயந்த-

மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வேலைத்திட்டத்தில் இருந்து அரசாங்கம் விலகிச்செல்லும் நிலைமையே காணப்படுகிற்னது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கும் விடயத்தில் நல்லாட்சி அரசாங்கத்தின் பொறிமுறை சரியானது, அதனையே மீண்டும் முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

அரசாங்கத்தில் ஒரு சில வேலைத்திட்டங்களில் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தியில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில், அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அரசாங்கத்தில் இருக்கும் சரியான சிந்தனையாளர்கள், அனுபவம் மிக்கவர்களை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். அனுபவசாலிகளை முன்னணியில் நிறுத்தி பயணிக்க வேண்டும். பேராசிரியர் திஸ்ஸ விதாரண போன்றவர்களுக்கு இந்த அரசாங்கம் இடம் கொடுக்கவில்லை, கொவிட் நிலைமைகளை சரியாக கையாளும் சிறந்த ஆறு வைத்தியர்கள் அரசாங்கத்தில் உள்ளனர். சிறந்த சட்டத்தரணிகள் உள்ளனர். இவ்வாறான மனித வளங்களை பயன்படுத்திக் கொண்டால் அரசாங்கம் நெருக்கடிகளை தவிர்க்கலாம். ஆனால் இந்த குறைபாடுகளை சரிசெய்துகொள்ள அரசாங்கம் இன்னமும் முயற்சிக்கவில்லை.

மக்களின் அபிலாசைகளை சரியாக பூர்த்திசெய்துகொள்ள, மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முறையான வேலைத்திட்டம் உருவாக்கப்படவில்லை. பல வேலைத்திட்டங்களில் அரசாங்கம் தவறான தீர்மானம் எடுக்கின்றது. அதனை நிவர்த்தி செய்யவே நாம் வலியுறுத்திக்கொண்டுள்ளோம். கடந்த கால தவறுகளை சரிசெய்து சரியாக பயணிக்க வேண்டும், சட்டவாக்க சபை, நீதிமன்றம், நிறைவேற்று அதிகாரம் என்பன சரியாக செயற்பட வேண்டும். அதிகார பரவலாக்கல் நியாயப்பாடுகளை சரியாக கையாள வேண்டும்.

அரசியல் அமைப்பில் அதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இப்போது அரசியல் அமைப்பு உருவாக்கத்திற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்ற போதிலும் அது முறையான செயற்பாடாக அமையவில்லை. 1978 ஆம் ஆண்டு உருவாக்கத்தின் போது விடப்பட்ட தவறுகளை சரிசெய்ய வேண்டுமே தவிர மேலும் நெருக்கடிகளை உருவாக்க நினைக்கக்கூடாது. அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் சகல தரப்பையும் இணைத்துக்கொண்டு, பயணிக்க வேண்டும்.


# கேள்வி அறிவித்தல் - 2022
# காரைநகர் பிரதேச சபை

## (மீன் சந்தைகள், கோழி இறைச்சிக்கடை, பாரம்பரிய உணவகம், அரை நிரந்தரக்கடை, ஆண்கள்/பெண்களுக்கான பொதுக்குளியலறை மற்றும் மலசலகூடம்

யாழ் மாவட்ட நிரந்தர வதிவிடத்தைக்கொண்ட பொதுமக்களிடமிருந்து 01.01.2022 முதல் 31.12.2022 வரை காரைநகர் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், கோழி இறைச்சிக்கடை, பாரம்பரியஉணவகம், அரை நிரந்தரக்கடை, ஆண்கள்/பெண்களுக்கான பொதுக்குளியலறை மற்றும் மலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்.

★ கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 23.11.2021 - 06.12.2021 வரை
★ கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :- 07.12.2021 பி.ப 1.45 மணிவரை
★ கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 07.12.2021 பி.ப 2.00 மணிக்கு
★ கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் :- தலைமை அலுவலகம், காரைநகர் பிரதேச சபை

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், காரைநகர் பிரதேச சபை என்ற முகவரிக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.

★மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். தேசிய அடையாள அட்டை, அதன் நிழற்படப் பிரதி மற்றும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் என்பவற்றுடன் விண்ணப்பதாரி நேரடியாக சமூகமளிக்க வேண்டும்.
★ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாததுடன் கேள்விக்காரரின் பெயர் "தவறுனர்" பட்டியலில் சேர்க்கப்படும்.
★கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
★ தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 15.12.2021 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
★ கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமூகமளிக்கலாம்.
★ மீன் சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்கு கொண்டு வரும் மீன் உட்பட கடலுணவு வகைகளிற்கு கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00 உம் வியாபாரிகளுக்கான இடவரி தொடர்பில் (மீன் சந்தை, மீன் வெட்டும் இடம்) கூடு ஒன்றிற்கு ரூபா 30.00 உம் துவிச்சக்கரவண்டி பாதுகாப்புக்கட்டணம் ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக்கட்டணம் ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்விதக்கட்டணங்களும் அறவிடமுடியாது.
★ மீன் சந்தை சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டாரத்தில் மீன் விற்பனை செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
★ மீன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக்கட்டணம் என்ற சிட்டையை கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒரு கட்டணத்தையும் அறவிடமுடியாது.
★ கேள்விதாரர் காலத்திற்கு காலம் அரசினால் வழங்கப்படும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வேண்டும்.
★உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனிஜும் படிவம் வழங்கப்பட்ட பின்னர் குறித்த விடயம் தெரியவரும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
★ இறைச்சிக்கடை மற்றும் பாரம்பரிய உணவகத்திற்கான கேள்வியில் சித்திபெற்ற கேள்விதாரர் மேலதிகமாக நான்கு மாத வாடகைப் பணத்தினை முற்பணமாக 15.12.2021 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். இம் முற்பணம் ஒப்பந்த காலத்தின் இறுதி நான்கு மாத கால வாடகை கட்டணத்திற்கு பதிலீடு செய்யப்படும்.
★ சித்தி பெறாத கேள்விதாரர்களின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
★மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

2022 ஆம் ஆண்டுக்கான சந்தைகள், இறைச்சிக்கடை, மற்றும் ஏனையவற்றிற்கான குத்தகை அட்டவணை

| தொ. இல | விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | வருட வாடகை | கேள்விப் பிணைப் பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக் கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆலடி மீன் சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்துடன்) | 278,232.00 | 0.00 | 2,000.00 | 1,000.00 |
| 02 | வலந்தலைமீன்சந்தை(துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்துடன்) | 52,800.00 | 0.00 | 1,000.00 | 500.00 |
| 03 | வலந்தலை மீன் சந்தை கோழி இறைச்சிக்கடை | 23,760.00 | 10,800.00 | 2,000.00 | 1,000.00 |
| 04 | கசூரினா சுற்றுலா மையத்திலுள்ள பாரம்பரிய உணவகம் | 45,144.00 | 36,000.00 | 2000.00 | 1000.00 |
| 05 | கசூரினா சுற்றுலா மையத்திலுள்ள ஆண்கள் பொதுக்குளியலறை மற்றும் மலசலகூடம் | 160,380.00 | 0.00 | 2000.00 | 1000.00 |
| 06 | கசூரினா சுற்றுலா மையத்திலுள்ள பெண்கள் பொதுக்குளியலறை மற்றும் மலசலகூடம் | 129,690.00 | 0.00 | 2000.00 | 1000.00 |
| 07 | கசூரினா சுற்றுலா மையத்திலுள்ள அரை நிரந்தரக்கடை | 22,700.00 | 0.00 | 2000.00 | 500.00 |

தவிசாளர்,
பிரதேசசபை,
காரைநகர்.

# இந்திய, சீன உர இறக்குமதிகளில் மோசடிகள் உள்ளமை உறுதியாகியது

## -அரசே பொறுப்பு கூற வேண்டும் என்கிறார் சம்பிக்க-



சீனாவில் இருந்து சேதன பசளை உர இறக்குமதி, இந்தியாவில் இருந்து திரவ உரம் இறக்குமதி ஆகியவற்றின் ஊடாக இடம்பெற்றுள்ள முறைகேடுகளுக்கு அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி ஊடாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நனோ- யூரியா திரவ உரத்தின் ஊடாக பாரிய நிதி மோசடி இடம் பெற்றுள்ளது என்பதை பகிரங்கப்படுத்தினேன்.

ஊடக பிரபல்யத்திற்காக போலியாக குற்றச்சாட்டுக்களை நான் முன்வைப்பதாக குறிப்பிட்ட விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இந்தியாவில் இருந்து திரவ உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது எனவும் அதில் எவ்வித நிதி மோசடிகளும் இடம்பெறவில்லை எனவும் குறிப்பிட்டு குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

விவசாய உர கூட்டுறவு நிறுவனத்தின் தொழினுட்ப அதிகாரிகள் தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள். அந்த அதிகாரிகளில் அனில் யாதேவ் என்பவர் கடந்த 18 ஆம் திகதி ஊடக சந்திப்பினை ஏற்பாடு செய்து அதில், இறக்குமதி செய்யப்பட்ட திரவ உரம் தொடர்பில் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் உண்மை என்பதை நிரூபிக்கும் வகையில் அவரது ஊடகச்சந்திப்பில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட 500 மில்லி லீற்றர் திரவ உரத்தின் இந்திய விலை 240 ரூபா என அவர் குறிப்பிட்டுள்ளார் நானும் அதனையே குறிப்பிட்டேன்.ஒரு லீற்றரின் விலை 480 ரூபாவாக காணப்படுகிறது.

இந்தியாவில் இருந்து கொமர்ஷல் உர நிறுவனத்தின் ஊடாக திரவ உரம் இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியது இருப்பினும் திரவ உரம் தனிப்பட்ட தரப்பினர் ஊடாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

2.1 மில்லியன் லீற்றர் திரவ உரத்தை நாட்டுக்கு கொண்டு வருவதற்கு 52 டொலர் செலவாகும் என அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளித்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்தியாவில் இருந்து திரவ உரத்தை இறக்குமதி செய்த நிறுவனம் கடந்த ஒக்ரோபர் 18 ஆம் திகதி அமைச்சரவை பத்திரம் வெளியான நாளன்று வங்கி கணக்கை ஆரம்பித்துள்ளது அதன் பிறகு வங்கி கணக்கு முடக்கப்பட்டுள்ளது நிதி மோசடியுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட வேண்டும்.

மறுபுறம் சீன நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டு திருப்பியனுப்பி வைக்கப்பட்ட சேதன பசளை என்று குறிப்பிடப்படுகின்ற உரம் தேசிய பாதுகாப்பிற்கு மாத்திரமல்ல இராஜதந்திர உறவிற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த உர இறக்குமதியின் பின்னணியில் பிரதமரின் செயலாளரது உறவினர் உள்ளார் என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த உர இறக்குமதி தொடர்பில் சீன நிறுவனம் நட்டஈடு கோரியுள்ளது. அதனை அரசாங்கமோ, மக்கள் வங்கியோ செலுத்த வேண்டியதில்லை. முறையற்ற இறக்குமதியுடன் தொடர்புடைய நபர் தனிப்பட்ட நிதியிலிருந்து அதனை செலுத்திக் கொள்ள வேண்டும்.

சேதன பசளை உரம் மற்றும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட திரவ உரம் ஆகியவற்றின் ஊடாக இடம் பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பில் அரசாங்கம் நிச்சயம் பொறுப்பு கூறவேண்டும் என்றார்.

# ஓட்டமாவடியில் 3233 சடலங்கள் அடக்கம்

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களில் ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ள சடலங்களின் எண்ணிக்கை 3233 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களது சடலங்கள் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் உள்ள ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றது. அந்த வகையில் நேற்று முன்தினம் மேலும் இருவரின் சடலங்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன.இதையடுத்து அங்கு இதுவரை அடக்கம் செய்யப்பட்டுள்ள கொவிட்-19 சடலங்களின் எண்ணிக்கை 3233 ஆக அதிகரித்துள்ளது.

# 11 பெண்கள் படுகொலை; 12 பாலியல் வன்முறைகள்;94 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

## -8 மாதங்களில் மலையகத்தில் மட்டும் சம்பவங்கள்-




இவ்வருடத்தின் முதல் 8 மாத காலப் பகுதியில் மத்திய மாகாணத்தில் 11 பெண்கள் கொலை செய்யப் பட்டிருப்பதுடன் குறித்த அதே காலப்பகுதியில் 94 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களும் பதிவாகியிருப்பதாக மத்திய மாகாண சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ் வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையிலான முதல் 8 மாத காலத்தில் இச் சம்பவங்கள் பதிவாகியிருப்பதாக மத்திய மாகாண சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அதிகாரி திருமதி ஜானகி செனவிரத்ன இத் தகவல்களைத் வெளியிட்டார். குறித்த 8 மாத காலத்தினுள் சிறுவர்களைத் தாக்கிக் காயப்படுத்திய 27 சம்பவங்கள் மத்திய மாகாணத்தில் பதிவாகியுள்ளன.

மாத்தளை பொலிஸ் பிரிவில் சிறுவர்களை தாக்கிக் காயப்படுத்திய சம்பவங்கள் 9 உம், கண்டி பொலிஸ் பிரிவில் 8 உம் பதிவாகியிருக்கும் நிலையில், கம்பளை பொலிஸ் பிரிவில் அத்தகைய சம்பவங்கள் எதுவும் பதிவாகாமை விசேட அம்சமாகும்.

இக்காலப் பகுதியில் பெண்கள் மீதான 12 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதே காலப் பகுதியில் 11 பெண்கள் கொலை செய்யப்பட்டிருப்பதுடன் இவற்றில் 4 கொலைச் சம்பவங்கள் நுவரெலியா பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளன. கண்டி பொலிஸ் பிரிவில் பெண்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள் 4 பதிவாகியுள்ளன. இவை இவ்வாறிருக்க, கொரோனா வைரஸ் பரவல் நிலை காரணமாக பாடசாலைகள் மற்றும் தனியார் வகுப்புகள் என்பன இடம் பெறாதிருந்த பின்னணியில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு இலக்கான சம்பவங்கள் பெற்றார்களின் பாதுகாப்பில் பிள்ளைகள் இருந்த காலத்தில் என்பதையும் இது தொடர்பில் பெற்றார்கள் விசேட கவனம் செலுத்துதல் அவசியம்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பலரிடம் இவ் விவகாரம் தொடர்பில் வினவிய போது அவர்களில் பெரும் எண்ணிக்கையிலானோரிடம் தொலைப்பேசி வசதிகள் எதுவும் இல்லாதிருந்தமை தெரியவந்ததாகவும், துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர் மற்றும் சிறுமிகள் பலரும் பாதிக்கப்பட்டிருப்பது அவர்கள் தமது தாய் அல்லது தந்தையின் தொலைபேசிகளின் மூலம் வெளி நபர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளின் மூலம் என்பது தெரியவந்திருப்பதாகவும் மத்திய மாகாண சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அதிகாரி திருமதி ஜானகி செனவிரத்ன மேலும் கூறினார்.

# 1.5 மில்லியன் பைசர் டோஸ்கள் நேற்று நாட்டை வந்தடைந்தன

கொவிட்-19 தடுப்பூசி திட்டத்தின் கீழ் இலங்கையர்களுக்கு மூன்றாவது டோஸ் வழங்குவதற்காக மேலும் 1.5 மில்லியன் பைசர் டோஸ்கள் நேற்று திங்கட்கிழமை அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளது.

5,055 கிலோ கிராம் எடை கொண்ட இந்த தடுப்பூசி அளவுகள் முதலில் நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமில் இருந்து ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய்க்கு கொண்டு செல்லப் பட்டது.

அதன் பின்னர் அங்கிருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 12.45 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

பின்னர் விசேடமாக குளிரூட்டப்பட்ட லொறிகளின் உதவியுடன் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள் உறுதிபடுத்தினர்.

# மீண்டும் இலங்கைக்கான சேவையை ஆரம்பித்த ஏரோஃப்ளோட் ஏர்லைன்ஸ்



ஏரோப்ளோட் ஏர்லைன்ஸ், மொஸ்கோவிற்கும் கொழும்புக்கும் இடையிலான தனது சேவையினை நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பித்துள்ளது. அதன்படி ஏரோப்ளோட் ஏர்லைன்ஸின் Ð,284 என்ற முதல் விமானம் நேற்று முன்தினம் 240 பயணிகளுடன் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

ரஷ்யாவின் இந்த விமான சேவை தொடக்கத்தில் ஒவ்வொரு வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாரத்திற்கு இரு முறை தனது சேவையினை முன்னெடுக்கும்.

மேலும் இதனை எதிர்காலத்தில் வாரத்திற்கு 5 முறை வரை இந்த சேவையை அதிகரிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஏரோப்ளோட்-ரஷியன் ஏர்லைன்ஸ், கொழும்பிற்கு விமானங்களை இயக்கிய மிகப் பழமையான சர்வதேச விமான நிறுவனமாகும். மேலும் 1964 முதல் மொஸ்கோ-கொழும்பு வழியை இயக்கி வருகிறது. கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோய் காரணமாக ஏரோப்ளோட் ஏர்லைன்ஸ் 2020 இல் கொழும்புக்கான சேவையினை நிறுத்த வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தொழில்நுட்பக் கோளாறு; சேவையை மட்டுப்படுத்திய

## -வெளிவிவகார அமைச்சகம்-

தொழில்நுட்பக் கோளாறுகளினால் நேற்று திங்கட்கிழமை முதல் கொன்சியூலர் விவகாரப் பிரிவுக்கு வருகை தரும் 150 சேவை பெறுநர்களுக்கு மாத்திரமே சேவைகளை வழங்க முடியும் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவில் செயற்படுத்தப்படுகின்ற மின்னணு ஆவணச் சான்றளிப்பு முறைமையில் (ஈ-டாஸ்) ஏற்பட்டுள்ள சீர்குலைவின் காரணமாக, கடந்த வாரத்தில் சான்றளிப்பு சேவைகள் பாதிக்கப்பட்டு, சேவைகளை வழங்குவதில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டது.

மேலும், பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்ள கிளை சான்றளிப்பு முறைமையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்காக வெளிநாட்டு அமைச்சு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இந்தப் பிரச்சினைகளை சீர் செய்யும் முகமாக அமைச்சின் தொழில்நுட்பக் குழு செயற்பட்டு வருகின்றது.

எனவே இந்த சூழ்நிலையில், நேற்று முதல் தினசரி வருகை தரும் 150 வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே கொன்சியூலர் விவகாரப் பிரிவினால் சேவைகளை வழங்க முடியும்.இந்தப் பிரச்சினைகள் சீர் செய்யப்பட்டவுடன் சான்றிதழ்கள் ஆவணங்களின் சான்றளிப்புக்கான சாதாரண சேவைகள் வழங்கப்படும்.

கணினிப் பராமரிப்பு சார்ந்த பணிகள் நிறைவடைந்தவுடன், புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.

மேலதிக தகவல்களுக்காக 011- 2338812 அல்லது dgcons@mfa.gov.lk மூலம் கொன்சியூலர் விவகாரப் பிரிவை நீங்கள் தொடர்பு கொள்ளலாம் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# 295 பஸ்களின் சாரதிகளுக்கு பொலிஸார் கடும் எச்சரிக்கை

நாட்டில் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத் தவறியமைக்காக மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் 295 பயணிகள் பஸ்களின் சாரதிகள் பொலிஸாரினால் எச்சரிக்கப் பட்டுள்ளனர்.

அதேநேரம் 485 வர்த்தக நிலைய நடத்துனர்களும் எச்சரிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.மேல் மாகாணத்தில் வசிப்பவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுகிறார்களா என்பதை ஆராய்வதற்காக, நேற்று முன்தினம் நண்பகல் முதல் பிற்பகல் 2 மணி வரை அங்கு விசேட பொலிஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 439 பொலிஸ் அதிகாரிகள் இந்த நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இதன்போது 885 பயணிகள் பஸ்கள், குளிரூட்டப்பட்ட பஸ்கள், 1,112 சில்லறை விற்பனை நிலையங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற வர்த்தக நிலையங்களும் சோதனைக்கு உட்படுத்தப் பட்டன.

# இலங்கை வருகிறார் ஐ.நா.வின் ஆசியா உதவி பொதுச் செயலாளர்



ஐ.நா.வின் மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக்கான உதவி பொதுச் செயலாளர் நாயகம் மொஹமட் காலித் கியாரி இன்று முதல் 25 ஆம் திகதிவரை இலங்கைக்கு தனது முதல் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இங்கு வரும் காலித் கியாரி, சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள், அரசியல் கட்சிகள், சிவில் சமூகம், மதத் தலைவர்கள் மற்றும் இராஜதந்திர சமூகத்தின் பிரதிநிதிகளை சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு செப்ரெம்பரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் சந்தித்ததைத் தொடர்ந்து இந்த விஜயம் அமையவுள்ளது.

2019/28 மே அன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், துனிசியாவைச் சேர்ந்த மொஹமட் காலித் கியாரியை மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசுபிக் ஆகிய நாடுகளுக்கான அரசியல் மற்றும் அமைதியை கட்டியெழுப்பும் விவகாரங்கள் மற்றும் அமைதி நடவடிக்கைகளுக்கான உதவிப் பொதுச் செயலாளராக நியமித்தார்.

# 10 கஜமுத்துக்களை வைத்திருந்த மூவர் கைது



கல்முனை விசேட பொலிஸ் படையணியைச் சேர்ந்த பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, 10 கஜமுத்துகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள், 24, 50 மற்றும் 64 வயதுகளுடைய மல்மாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் அச்சுறுத்தல் அதிகரிப்பு

## -இந்தியபாதுகாப்பு அமைச்சர்-



இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளதுடன் இந்தோ பசிபிக் கடல்பாதையில் இந்திய கடற்படையின் பங்கு முக்கியமானதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய கடற்படையின் பலத்துக்கு மேலும் வலுவூட்டும் வகையில், ரேடார்களால் கண்டுபிடிக்க முடியாத, எதிரியை அழிக்கும் ஏவுகணைகள் உடைய ஐ.என்.எஸ். விசாகப்பட்டினம் என்ற போர்க் கப்பலை அவர் நேற்று முன்தினம் மும்பையில் வைத்து கடற்படையிடம் கையளித்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் பேசுகையில்:

இந்தோ-பசிபிக் கடல்பாதையில் இந்திய கடற்படையின் பங்கு முக்கியமானது. விசாகப்பட்டினம் போர்க்கப்பல் நாட்டில் கட்டப்பட்டுள்ள போர்க்கப்பல்களில் மிகவும் பெரியதாகும். இந்தியாவை உள்நாட்டு கப்பல் கட்டும் மையமாக உருவாக்க எல்லா வாய்ப்புகளும் நமக்கு உள்ளன. குறுகிய நலன்கள் கொண்ட சில பொறுப்பற்ற நாடுகள், கடல்சார் தொடர்புடைய சர்வதேச ஒப்பந்தத்தை மீறுகின்றன. இந்தியா பொறுப்பு வாய்ந்த கடல்சார் பங்குதாரராக விளங்குகிறது.

எதிரிகளின் ரேடார்களில் சிக்காத, எதிரிகளை அழிக்கும் ஏவுகணைகளை ஏந்திச் செல்லும் இந்த போர்க் கப்பல், 7,400 டன் எடையுள்ளது. மொத்தம் 163 மீ. நீளமுள்ள இந்த கப்பல், 30 கடல் மைல் வேகத்தில் இயங்கக் கூடியது. இதில் உள்ள கருவிகள், ஆயுதங்கள் என 75 சதவீதம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில், இந்தப் போர்க் கப்பல், நம் கடற்படைக்கு கூடுதல் வலிமையை தரும் என்றார்.

# மெரினா கடற்கரைக்கு மக்கள் செல்ல பொலிஸார் தடைவிதிப்பு



சென்னை மெரினா கடற்கரையில் மாணவர்கள் போராட்டம் நடத்தப் போவதாக தகவல் வெளியான நிலையில் நேற்று திங்கட்கிழமை மக்கள் கடற்கரைக்கு செல்லவதற்கு சென்னை பொலிஸார் தடை விதித்தனர். அனைத்து கல்லூரிகளிலும் தேர்வுகள் நேரடியாக தான் நடத்தப்படும் என தமிழக அரசு கடந்த வாரம் அறிவித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இணையவழியில் தேர்வுகள் நடத்தக் கோரியும் மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று மெரினா கடற்கரையில் மாணவர்கள் போராட்டதில் ஈடுபடப் போவதாக தகவல்கள் பரவியது. இதையடுத்து கடற்கரை முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட போலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அத்துடன் மெரினாவில் உள்ள சர்வீஸ் சாலை பொலிஸாரால் மூடப்பட்டு பொதுமக்கள் மெரினா கடற்கரைக்கு வர அனுமதி இல்லை என பொலிஸார் அறிவித்திருந்தனர்.

# தமிழகத்தில் பா.ஜ.க. தொடர் போராட்டம்



தமிழக அரசாங்கம் பெற்றோல் மற்றும் டீசல் மீதான மாநில வரியை குறைக்கக்கோரி எதிர்வரும் 3 ஆம் திகதி வரை தொடர் போராட்டம் நடத்தப்படுமென பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை அறிவித்துள்ளார்.

அதாவது தமிழக அரசாங்கம் பெற்றோல் மற்றும் டீசல் விலையை குறைக்கக் கோரியும், காஸ் சிலிண்டர் விலையை தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி சிலிண்டருக்கு 100 ரூபாய் குறைக்கக்கோரியும் நேற்று தொடர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

இந்த போராட்டம் டிசம்பர் 3 ஆம் திகதி வரை மாநிலம் முழுவதும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எந்தெந்த அணியின் சார்பில், எந்த வகை போராட்டங்கள் நடத்தப்படும் என்றும், போராட்டத்தின் பொறுப்பாளர்கள் அடங்கிய பட்டியலின் விபரங்களையும் அவர் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆந்திராவில் கனமழை; 43 பேர் பலி, நூற்றுக்கும் மேற்பட்டோர் மாயம்



ஆந்திர மாநிலத்தில் சித்தூர், நெல்லூர், கடப்பா, அனந்தபூர், பிரகாசம் ஆகிய 5 மாவட்டங்களில் சீரற்ற காலநிலையினால் ஏற்பட்டகனமழை மற்றும் வெள்ளத்தினால் இதுவரை 43 பேர் உயிரிழந்ததாகவும் நூற்றுக்கும் மேற்பட்டோரை காணவில்லையெ அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

அதாவது வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுமண்டலம் சென்னை அருகே கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை கரை கடந்தது. இதனால் ஆந்திர மாநிலத்தில் சித்தூர், நெல்லூர், கடப்பா, அனந்தபூர், பிரகாசம் ஆகிய 5 மாவட்டங்களில் கனமழை கொட்டித்தீர்த்ததால் அம்மாவட்டங்கள் வெள்ளக்காடாக மாறின.

திருப்பதியில் கல்யாணி அணை நிரம்பியதால் 2 மதகுகளில் தண்ணீர் வெளியேற்றப்பட்டது. இதனால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. மேலும் ராயலசெருவு ஏரிக்கும் உபரி நீர் போய் சேர்ந்தது. இதன் காரணமாக திருப்பதியின் மிகப் பெரிய ஏரியான ராயலசெருவு எப்போது வேண்டுமானாலும் உடையலாம் என்ற அபாய நிலைக்கு நேற்று முன்தினம் மாலை வந்தது. இதையடுத்து ஏரியை சுற்றியுள்ள கிராம மக்கள் முகாம்களுக்கு மாற்றப்பட்டனர்.

இதேவேளை திருப்பதி நகரில் பெரும்பாலான இடங்களில் மழை நீர் தேங்கியுள்ளது. பால், குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைக்கு மக்கள் தவிக்கும் நிலை உள்ளது. நெல்லூர், கடப்பா, அனந்தபூர், பிரகாசம் மாவட்டங்களிலும் கன மழையால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்ட பலர், சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். பலர் தங்கள் குடும்பத்தாரை காணவில்லை என பொலிஸ் நிலையங்களில் புகார் கொடுத்துள்ளனர். கனமழை, வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் இதுவரை 43 பேர் உயிரிழந்ததாகவும் நூற்றுக்கும் மேற்பட்டோரை காணவில்லை எனவும் அம்மாநில அரசு அறிவித்துள்ளது. இதில் கடப்பா மாவட்டம், சேயேரு கிராமத்தில் உள்ள சிவன் கோயிலில் கார்த்திகை தீபம்ஏற்றச் சென்ற 2 கிராம மக்களில் 26 பேர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர். இதனிடையே ஆந்திரமுதல்வர் ஜெகன் மோகன்ரெட்டி நேற்று முன்தினம் காலை ஹெலிகாப்டர் மூலம் சித்தூர், நெல்லூர், கடப்பா, பிரகாசம், அனந்தபூர்ஆகிய 5 மாவட்டங்களிலும் வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்தார்.

ஆந்திர மாநிலம், அனந்தபூர் மாவட்டம், கதிரியில் உள்ள பழைய சேர்மேன் தெருவில், கனமழைக்கு, கட்டுமானத்தில் உள்ள 3 அடுக்கு மாடி திடீரென நேற்று முன்தினம் காலை இடிந்து பக்கத்தில் இருந்த 2 அடுக்கு மாடி மீது விழுந்தது. இதில் 2 அடுக்கு மாடியில் குடியிருந்த சுமார் 15 பேரும் இடிபாடுகளில் சிக்கினர். இதில் 3 குழந்தைகள், ஒரு பெண் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர். மழை தொடர்ந்து பெய்வதால் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

## -பாலியல் தொல்லை-

# தலைமை ஆசிரியரை கைது செய்; மாணவர்கள் தொடர் போராட்டம் முன்னெடுப்பு

ஈரோடு மாவட்டம், சீனாபுரத்தில் அரசு மேல்நிலைப்பள்ளியில் இடம் பெற்ற பாலியல் தொல்லை விடயத்தில் தலைமை ஆசிரியரை கைது செய்ய கோரி அரசுப் பள்ளி மாணவர்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

குறித்த மேல்நிலைப்பள்ளி உயிரியல் ஆசிரியர் மீது முன்னாள் மாணவர்கள் சிலர் பாலியல் குற்றச்சாட்டை சுமத்தி, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக வலைதளத்தில் பதிவிட்டனர். இதையடுத்து இது குறித்து விசாரணை நடத்துமாறு ஈரோடு மாவட்ட பொலிஸ் மேல் அதிகாரி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதையடுத்து கடந்த சனிக்கிழமை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு பொலிஸார் மற்றும் அதிகாரிகள் விரைந்து சென்று பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகளிடம் விசாரணை நடத்தினர். இதில் உயிரியல் ஆசிரியர் மாணவிகளிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்டது தெரியவந்தது. அதைத்தொடர்ந்து அவரை போக்சோ சட்டத்தின் கீழ் ஈரோடு அனைத்து மகளிர் பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்தனர். இவ்வாறான நிலையில்; தலைமை ஆசிரியரையும் கைது செய்யக் கோரி அரசுப் பள்ளி மாணவர்கள் போராட்டம் நடத்தினர். போராட்டம் நடத்தி வரும் மாணவர்களிடையே பொலிஸ் அதிகாரி பேச்சு வார்த்தை நடத்தினார். இருப்பினும் மாணவிகள் பாலியல் புகார் தொடர்பாக தலைமை ஆசிரியரையும் கைது செய்ய வேண்டுமென தெரிவித்து தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.இந்நிலையில் மாணவர்களுடன் அவர்களின் பெற்றோரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# பாகிஸ்தான் போர் விமானத்தை சுட்டவருக்கு வீர் சக்ரா விருது

பாகிஸ்தான் போர் விமானத்தை சுட்டு வீழ்த்திய அபிநந்தனுக்கு வீர் சக்ரா விருதை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் வழங்கியுள்ளார்.

பல்வேறு துறைகளில் சாதனை படைக்கும் குடிமக்களுக்கு நாட்டின் உயரிய விருதுகளான பத்ம விபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ போன்ற விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றன. இந்த விருதுகள் ஆண்டுதோறும் குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்படுகிறது.

கொரோனா பரவல் காரணமாக கடந்த ஆண்டுக்கான விருதுகள் வழங்கப்படவில்லை.


இவ்வாறான நிலையில் கடந்த ஆண்டு (2020) மற்றும் இந்த ஆண்டுக்கான விருதுகள் ஜனாதிபதி மாளிகையில் வழங்கப்பட்டு வருகின்றன.


இந்தநிலையில், கடந்த 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் திகதி பாகிஸ்தான் போர் விமானத்தை சுட்டு வீழ்த்திய அபிநந்தனுக்கு வீர் சக்ரா விருதை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.


மேலும் மேஜர் விபூதி சங்கருக்கு ஐந்து பயங்கரவாதிகளை சுட்டுக் கொன்று மற்றும் 200 கிலோ வெடிபொருட்கள் மீட்கும் ஒரு நடவடிக்கையில் ஈடுபட்ட அவரது வீர தீர செயலுக்காக சௌரிய சக்ரா (மரணத்திற்குப் பின்) விருதை பெறுகிறார். அவரது சார்பில் அவரது குடும்பத்தார் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

# தாஜ்மஹால் போன்று வீட்டினை மனைவிக்கு பரிசளித்தவர் பெருமிதம்

மத்திய பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் தனது மனைவிக்காக தாஜ்மஹாலை போன்று வீடு ஒன்றை கட்டி கொடுத்துள்ளமை குறித்தான செய்தி ஊடகங்களில் விரைவாக பரவுகின்றது. மத்திய பிரதேசத்தில் தாஜ்மஹால் போலவே ஒரு அழகான வீட்டை கட்டிய ஒருவர் அதனை தனது மனைவிக்கு பரிசாக அளித்துள்ளார். இந்நிலையில் ஷாஜகான் கட்டத் தவறியதை தான் கட்டியுள்ளதாக அந்நபர் பெருமிதப்பட்டு வருவதாக இந்திய ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன. அதாவது புர்கான்பூரில் உள்ள தப்தி ஆற்றின் கரையில் தாஜ்மஹாலை கட்ட ஷாஜகான் திட்டமிட்டதாகவும், ஆனால் பல காரணங்களால் ஆக்ராவில் கட்டப்பட்டதாகவும் வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறான நிலையில் தன் மனைவிக்கு புர்கான்பூரில் தாஜ்மஹாலை கட்டி ஷாஜகான் கட்ட தவறியதை தான் கட்டியுள்ளதாக அவர் பெருமிதப்படுவதுடன் இந்த வீட்டை கட்டி முடிக்க 3 ஆண்டுகள் சென்றதாகவும் அவர் குறிப்பிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.











# இத்தாலிக்கு சென்ற அகதிகள் படகு கவிழ்ந்தது; 75பேர் உயிரிழப்பு



லிபியா அருகே மத்தியதரைக் கடலில் அகதிகளை ஏற்றி வந்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 75 பேர் உயிரிழந்ததாக ஐ.நா. அகதிகள் நல அமைப்பு (IOM) தெரிவித்துள்ளது. இத்தாலிக்கு அடைக்கலம் தேடி சென்று கொண்டிருந்த அகதிகளே அனர்த்தத்துக்குள்ளானதாக குறிப்பிடப்படுகின்றது.கடலில் தத்தளித்த 15 பேரை மீனவர்கள் மீட்டு லிபியா கொண்டு சென்றதாக குறிப்பிடப்படுகின்றது.

கடந்த வாரம் இந்த விபத்து இடம்பெற்றதாகவும் லிபியாவைக் கடந்து சென்று கொண்டிருந்த போது படகு கவிழ்ந்ததையடுத்தே இந்த அனர்த்தம் நேர்ந்ததாகவும் ஐ.நா. அகதிகள் நல அமைப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமாக மத்திய மத்தியதரைக் கடல் வழியாக புலம்பெயரும் முயற்சிகளின் போது இந்த ஆண்டு இதுவரை 1,300 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததாக ஐ.நா. அகதிகள் நல அமைப்பு தெரிவித்துள்ளது.

இத்தாலி போன்ற நாடுகளை அடைய விரும்புவோர் லிபியா - மக்ரெப்பில் போன்ற பகுதிகளுக்குச் சென்று அங்கிருந்து படகுகளில் புறப்படுவதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இத்தாலியின் சிசிலி மற்றும் லம்பேடுசா கடற்கரையில் இரண்டு படகுகளில் வந்த சுமார் 400 புலம்பெயர்ந்தோரை மீட்டதாக இத்தாலிய கடலோர காவல்படை சனிக்கிழமையன்று உறுதிப்படுத்தியது.

ஆண்டின் முதல் 10 மாதங்களில் 53,000 க்கும் அதிகமான புலம்பெயர்ந்தோர் இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழைந்துள்ளனர். இது 2020 இல் வந்த அகதிகள் தொகையை விட கிட்டத்தட்ட இருமடங்கு அதிகமாகும் எனவும் இத்தாலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொரோனா தொற்று அதிகரிப்பு; ஆஸ்திரியா முடக்க நிலை அறிவிப்பு



ஐரோப்பா முழுவதும் மீண்டும் ; கொரோனா தொற்று அதிகரித்து வரும்நிலையில் மத்தியில் ஐரோப்பிய நாடான ஆஸ்திரியா முழுமையான முடக்க நிலையை நேற்று திங்கட்கிழமை முதல்; அமுலுக்கு கொண்டு வந்துள்ளது. இந்த முடக்க நிலைமை 3 வாரங்களுக்கு அமுலில் இருக்குமெனவும் இக்காலப்பகுதியில் ஆஸ்திரியர்கள் தமது வீட்டிலிருந்து வேலை செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். கொரோனாப் பெருந் தொற்றின் நான்காவது மற்றும் ஐந்தாவது அலையை பல ஐரோப்பிய நாடுகள் எதிர்கொண்டுள்ள நிலையில் உலகில் முதல் நாடாக ஆஸ்திரியா கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதைக் கட்டயமாக்கியுள்ளதுடன் இதனை பெப்ரவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு கொண்டுவந்திருந்தது.

இவ்வாறிருக்க தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கான முடக்க நிலையை ஆஸ்திரிய அரசு தொடர்ந்து அமுல்படுத்தி வருகின்றது. இவ்வாறான நிலையில் கடந்த 15ஆம் திகதி அந்நாட்டு அரசு அமுலுக்கு வந்த புதிய விதிகளின் பிரகாரம் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் அல்லது கொரோனாத் தொற்றுக்கு ஆளாகிக் குணமடைந்தவர்கள் தவிர 12 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அவசிய தேவைகள் இன்றி வீடுகளைவிட்டு வெளியே வர முடியாது என உத்தரவிடப்பட்டிருந்தது.

இதனை மீறுவோருக்கு 500 முதல் 1,450 யூரோ வரை அபராதம் விதிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, புதிய விதிமுறைகளை மீறும் வர்த்தக நிறுவனங்களுக்கு 30,000 யூரோ வரை அபராதம் விதிக்கப்படும் எனவும் மூன்று வாரங்களுக்கு முழு நாட்டையும் முடக்குவதாகவும் வெளியான அறிவிப்பையடுத்து அத்தியாவசியமற்ற வணிக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஐரோப்பாவில் சில நாடுகளில் மீண்டும் கொவிட் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டு வருகின்றன. இதனை எதிர்த்து பெரும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்கிடையே ஐரோப்பா முழுவதும் மீண்டும் கொரோனா தொற்று தீவிரமாகி வருவது குறித்து உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படாவிட்டால் அடுத்த வசந்த காலத்திற்குள் மேலதிகமாக 5 இலட்சம் கொரோனா மரணங்கள் பதிவாகலாம் என உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பிய பிராந்திய பணிப்பாளர் டாக்டர் ஹான்ஸ் க்ளுக் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எல்லைக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துகிறது அவுஸ்திரேலியா



கொரோனா தொற்று நோய் நெருக்கடி காரணமாக அவுஸ்திரேலியா விதித்திருந்த எல்லைக் கட்டுப்பாடுகள் அகதிகள், சர்வதேச மாணவர்கள், தொழில்வான்மையாளர்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட சில பிரிவினருக்கு டிசம்பர் -1 முதல் மேலும் தளர்த்தப்படுவதாக பிரதமர் ஸ்கொட் மோரிசன் நேற்று அறிவித்துள்ளார்.

சர்வதேச மாணவர்கள், தொழில்வாண்மையாளர்களுடன் ஜப்பான் மற்றும் தென்கொரிய குடிமக்களுக்கும் கட்டுப்பாடுகளில் தளர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மனிதாபிமான அடிப்படையில் உள்வாங்கப்படும் அகதிகள் மற்றும் ஏனைய பிரிவு அவுஸ்திரேலிய விசா வைத்திருப்பவர்கள் முழுமையாக தடுப்பூசி போட்டிருந்தால், அவுஸ்திரேலிய அரசிடமிருந்து முன்னனுமதி பெறாமலேயே அவுஸ்திரேலியா பயணம் செய்ய முடியும். இவர்களுக்கான தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகள் அந்தந்த மாநிலங்களின் சட்டங்களுக்கேற்ப அமுல்படுத்தப்படும் எனவும் பிரதமர் ஸ்கொட் மோரிசன் கூறினார்.

அரசின் இவ்வறிவிப்பைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா விசா வைத்திருக்கும் சுமார் 2 இலட்சம் பேர் டிசம்பர் முதல் அவுஸ்திரேலியாவுக்கு பயணிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்ட அவுஸ்திரேலியர்கள் மற்றும் நிரந்தர வதிவிட உரிமை உள்ளவர்கள் விதிவிலக்கு அனுமதி பெறாமல் வெளிநாடுகளிலிருந்து அவுஸ்திரேலியா திரும்பக் கூடிய வகையில் நவம்பர் -01 முதல் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை மேலும் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் நியூசிலாந்து மற்றும் சிங்கப்பூருடன் செய்துகொள்ளப்பட்டுள்ள, தனிமைப்படுத்தல் கட்டுப்பாடற்ற பயண ஏற்பாட்டினைப் போலவே, ஜப்பான் மற்றும் தென்கொரியாவுடனும் அவுஸ்திரேலியா ஒப்பந்தமொன்றை எட்டியுள்ளது. இதன்கீழ் முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்ட ஜப்பான் மற்றும் தென்கொரிய நாட்டவர்கள் டிசம்பர் 1 முதல், தனிமைப்படுத்தல் கட்டுப்பாடின்றி அவுஸ்திரேலியாவுக்கு பயணம்செய்யமுடியும். கொரோனா தொற்று நோய் நெருக்கடி காரணமாக கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக அவுஸ்திரேலிய எல்லைகள் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அணிவகுப்புக்கள் புகுந்த காரில்; அகப்பட்டு 5 பலி,40க்கு மேற்பட்டோர் காயம்



அமெரிக்காவின் விஸ்கான்ஸின் மாகாணத்தில் கிறிஸ்துமஸ் அணிவகுப்பொன்றின் போது மக்கள் கூட்டத்துக்குள் தாறுமாறாக ஓடிய கார் மோதியதில் ஐவர் உயிரிழந்ததுடன், 40 க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க நேரப்படி மாலை 4:30 மணியளவில் இடம்பெற்ற அனர்த்தில்; சில உயிரிழப்புகள் நடந்ததாக விஸ்கான்சின் மாகாண பொலிஸ் தலைவர் டான் தோம்சன் செய்தியாளர்களிடம் கூறினார்.

இதேவேளை காயமடைந்த 11 பெரியவர்கள் மற்றும் 12 சிறுவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனையடுத்து கூட்டத்துக்கு புகுந்து மோதித் தள்ளிய சிவப்பு நிற கார் கைப்பற்றப் பட்டுள்ளது. அதன் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார். இது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் விஸ்கான்சின் மாகாண பொலிஸ் தலைவர் டான் தோம்சன் குறிப்பிட்டார்.

இதேவேளை, கார் மோதி இறந்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களின் விபரங்களை உடனடியாக வெளியிட முடியாது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## தாய்வான் தூதரக விவகாரம்; லிதுவேனியாவுடனான உறவை தரமிறக்கிய சீனா




லிதுவேனிய தலைநகர் வில்னியுஸில் தாய்வான் செயலளவிலான தூதரகம் ஒன்றை திறந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து லிதுவேனியாவுடனான இராஜதந்திர உறவை சீனா தரமிறக்கியுள்ளது. தாய்வான் என்ற பெயரில் இந்தத் தூதரகக் கட்டடத்தை திறப்பதற்கு லிதுவேனியா அனுமதி அளித்திருப்பது குறிப்பிடத்தக்க இராஜதந்திர நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

தனது ஆட்புலத்தின் ஓர் அங்கமாக தாய்வானை கருதும் சீனா 'தாய்வான்' என்ற பெயரை பயன்படுத்துவதை தடுக்க முயன்று வருகிறது. 'இறைமை மற்றும் சர்வதேச உறவுகளின் அடிப்படை அம்சங்களை பாதுகாப்பதற்காக இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை சீன அரசு தரம் குறைத்தது' என்று சீன வெளியுறவு அமைச்சு இது பற்றி வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது. 'இது தொடர்பில் எழும் அனைத்து விளைவுகளுக்கும் லிதுவேனிய அரசு பொறுப்பேற்க வேண்டும்' என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லிதுவேனியாவுக்கான சரக்கு ரயில்களை நிறுத்தி இருக்கும் சீனா அந்த நாட்டுக்கான உணவு ஏற்றுமதி அனுமதியையும் நிறுத்தியுள்ளது. சீனாவின் இந்த முடிவை இட்டு வருந்துவதாக லிதுவேனிய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

## பெண்கள் நாடகங்களில் நடிக்க தலிபான்களால் தடை விதிப்பு



ஆப்கானிஸ்தானில் பெண்கள் தொலைக்காட்சி நாடகங்களில் நடிக்க தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.

அத்துடன்,பெண் பத்திரிகையாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள், தொலைக்காட்சி உள்ளிட்ட காண்பியக் காட்சி ஊடகங்களில் தோன்றும்போது முக்காடு அணிய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும் எந்த வகையான முக்காடு பயன்படுத்த வேண்டும் என்று வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்படவில்லை. தலிபான்கள் அறிவித்துள்ள சில விதிகள் தெளிவற்றதாகவும் மேலதிக விளக்கம் தேவைப்படுவதாகவும் செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

அதே நேரத்தில் ஆண்கள் உடலின் அந்தரங்க பாகங்களை வெளிப்படுத்தும் காட்சிகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன்,மதத்தை அவமதிக்கும் அல்லது ஆப்கானியர்களை புண்படுத்தும் வகையில் அமையும் நகைச்சுவை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் தடைசெய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டு கலாச்சார விழுமியங்களை ஊக்குவிக்கும் வெளிநாட்டு திரைப்படங்களை ஒளிபரப்பக் கூடாது என தலிபான்கள் வலியுறுத்தியுள்ளனர். ஆகஸ்ட் நடுப்பகுதியில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அதிகாரத்துக்கு வந்த பின்னர் கட்டுப்பாடுகளை அவர்கள் கடுமையாக்கி வருகின்றனர்.

அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் நாட்டை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த தலிபான்கள்,பெண்கள் மற்றும் சிறுமிகள் பாடசாலை செல்ல கட்டுப்பாடுகளை விதித்தனர்.

1990களில் அவர்களின் முந்தைய ஆட்சியின் போது பெண்கள் கல்வி கற்கவும் வேலைக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் தலிபான்களில் புதிய கட்டுப்பாடுகள் பற்றிய அறிவிப்பு எதிர்பாராதது என ஆப்கானிஸ்தானில் உள்ள பத்திரிகையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பின் உறுப்பினர் ஹஜ்ஜதுல்லா முஜாதிதி தெரிவித்துள்ளார்.

சில விதிகள் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை.அவை நடைமுறைப்படுத்தப்பட்டால் தொலைக்காட்சி நிலையங்களை மூட வேண்டிய நிலை ஏற்படலாம் எனவும் அவர் கூறினார்.

## ஆப்கானில் மரணத்தின் விளிம்பில் 10 இலட்சத்துக்கு அதிகமான குழந்தைகள்

### -யுனிசெஃப் கவலை-



ஊட்டச்சத்துக் குறைவு, பட்டினி, வறுமை ஆகியவற்றால் ஆப்கானிஸ்தானில் சாவின் விளிம்பில் 10 இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் இருப்பதாக யுனிசெஃப் கவலை தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து கடந்த ஆகஸ்ட் மாதம் அமெரிக்க, நேட்டோ படைகள் வெளியேறியபின் தலிபான்கள் ஆட்சிக்கு வந்த நிலையில் ஆப்கானிஸ்தான் பொருளாதாரம் நாளுக்கு நாள் பெரும் சரிவைச் சந்தித்து வருகிறது. அத்தியாவசியப் பொருட்கள் கடும் விலை ஏற்றம், வேலைவாய்ப்பின்மை, வறுமை, பட்டினி போன்றவை ஆப்கானிஸ்தானில் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில் ஆப்கானிஸ்தானின் டோலோ சேனலுக்கு யுனிசெஃப்பின் ஆதரவு மற்றும் மக்கள் நலக்குழுவின் தலைவர் சாம் மோர்ட் அளித்த பேட்டியில், 1.40 கோடி குழந்தைகள் பட்டினியால் வாடுவதாகவும் 30 இலட்சம் குழந்தைகளுக்கும் அதிகமானோர் ஊட்டச்சத்துக் குறைபாடு; காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். இதில் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் சாவின் பிடியில் இருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

## சூடானில் ஆட்சியை மீண்டும் ஒப்படைக்க இராணுவம் இணக்கம்



சூடானில் பிரதமர் அப்தல்லா ஹாம்டோகிடம் ஆட்சியை மீண்டும் ஒப்படைக்க, இராணுவம் சம்மதம் தெரிவித்துள்ளது. ஐ.நா. அமைப்பும் அமெரிக்காவும் முக்கியப் பங்கு வகித்த இராணுவத்துக்கும் அரசியல் தலைவர்களுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைக்கு பிறகு இதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு கைது செய்யப்பட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரையும் விடுவிக்கவும் இராணுவம் சம்மதித்தது. மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, சுதந்திரமான ஓர் அமைச்சரவைக்கு ஹாம்டோக் தலைமை வகிப்பார். ஆட்சியில் தனது பிடியை இறுக்கும் வகையில் புதிய இறையாண்மை சபையை இராணுவம் அமைத்துள்ளது.

ஒப்பந்தம் குறித்த அறிவிப்பை அதிகாரபூர்வமாக வெளியிடுவதற்கு முன் அந்தக் சபைஇதுகுறித்து கூடி விவாதிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.